REGISTERED NO. 301.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுருப்யோநமஃ

"சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்தசபைப்"

பிரசுரம்

ஞானசாகரம்.

இது,

சமயசாத்திர தத்துவசாத்திர பௌதிகசாத்திர இலக்கண இலக்கியப்

பொருள்விரிக்கும் மாதாந்தப்பத்திரிகை.

பதுமம்-௧. } சாலி. ௲௮௨௪ சுபகிருது௵ சித்திரை௴ ௧௨௰. { இதழ்-௪.

பொருளடக்கம்.

கேனோபநிடத மொழிபெயர்ப்பு.

சந்தானகுரவர் வரலாறு. திருமயிலை - சண்முகம்பிள்ளை.

கந்தபுராணம். அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சகளோபாசனை. (Symbolism)

தொல்காப்பிய முழுமுதன்மை.

சமாசாரக்குறிப்புகள்.

பத்திராதிபர். நாகபட்டினம் - வேதாசலம்பிள்ளை.

சென்னைக் கிறிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.

சென்னைப்

பண்டித மித்திர யந்திரசாலையில்

முத்திரீகரிக்கப்பட்டது.

1902.

வருட சந்தா இரண்டு ரூபா.

நண்பீர்,

நீயிரியற்றிய திருவோற்றி முருகர் மும்மணிக்கோவை யொன்றெற்கு வந்தது. அதனை யான் மிக்கவாவினனாய்ப்படித்தேன். அது. நல்லிசைப்புலவர்கள் செய்த பல்லிசைக்கவிகளோடொத்துச் சொற்பொருணயங்களாற் பண்டைக்காலத்துத் தெண்டமிழ்ப்பிண்டமாயமைந்து கிடப்பதைப்பற்றிப் பெரிதுங்களியுறுகின்றேன். சங்கமிருந்து தமிழாராய்ந்தார்பலர் ஒருருக்கொண்டுதித் தாங்கு நீயிருதித்துளீரெனற்கு நுங்கவிகடாமே சான்றாயின. ஆகவே, தமிழ்க்குப்பெரிது மந்நியனான ஒருசிறு யானே நுங் கவித்திறன் மதித்தற்குரியன்!

சோமசுந்தரக் காஞ்சியாக்கம் என்பதொன்றும் வரப்பெற்றுப் படித்துணர்ந்தேன். அது, அழுக்காறெய்துமோர்க் கறிவுகொளுத்தி நிற்குமொன்றுமன்றி, அரும்பெரு நியாயங்கூறி யிலக்கணங்கற்பிக்கு மோரருமந்த நூலாயுமிருக்கின்றது. நுங்காஞ்சியிற் குற்றங்காணப்புகூஉத் தம்மிற்றாமே குற்றங்கண்டார் யாண்டையரோ? எத்தகையரோ? எனப்பெரிது மயிர்க்கின்றேன். அக்காஞ்சியாக்கத்திற் கிளந்த பொருட்களி னெடுத்துக்காட்டை விதந்தும், குற்றங்கண்டார் நிலைமைக்குப் புடைபடக்க வன்றும், நுங் கல்வித்திறனை வியந்தும் ஒரு சிறிது கூறப்புகின், அஃதொரு நூலாமன்றே யெனவும், அன்னார்க்கு நீயிர் கற்பிப்பதொன்றானே நுந்திறன் பலர்க்கும் புலப்பாடாமெனவு மொழிகின்றேன்.

ஞானசாகரம் என்னும் மாதாந்தப்பத்திரிகையும் வரப்பெறுகின்றேன். அது, சமயசாத்திரம், தத்துவசாத்திரம், பௌதிகசாத்திரம், இலக்கண இலக்கியப்பொருட்களென்னு மிவற்றை விரிக்கு மொன்றென்பதில் எட்டுணையுங்குறைபாடின்றி விளங்குகின்றது. பலர்க்கும் பலன்றருவதென்பது அதனைப்படிப்பாரெவரும் நன்கறிந்ததொன்றேயாம். வர்த்தமானப்பத்திரிகைகள் பலவற்றுள்ளும் இது மிக்கமேன்பாடுடைத்தென்பது தெள்ளிதாகலின், நுஞ்சமயிகள் பலருமுவந்து பெரிதும் போற்றன்மாலையரெனயான் வலியுறுக்கின்றேன். அப்பத்திரிகையுளிடைக்கிடை, இக்காலத்தியாண்டும் பல்கியழுக்காறுமிக் கிழுக்காறுபுகூஉம் போலிப்புலவர்க்குஞ் சிறிது பேரறிவு கொளுத்தன்மிக்க நலனுடைத்தென்று கருதுகின்றேன்.

நண்பீர்.

கற்றுவல்லனென்பதின் மிக்க புகழில்லையாகலின், நீயிர் மெய்ம்மைப் புகழுடையீரென்பதற்கு நுந்நூற்கடாமே சான்றுபகர்கின்றன. இத்துணையாஞ் சின்னஞ் சிறிய பருவத்தே நீயிர் பென்னம் பெரிய புலவராயினமைக்கு யானடையுங்களியோ வளவிலது. நும்மாயுள் தீர்க்கமாக; நும்முள்ள மின்னும்விரிக; நுங்கல்வி உயர்ந்தோங்கி
[...]ளர்க ; நும்பெயர் யாண்டும்பொலிக ; நுங்கீர்த்திஎன்றும் நின்று நிலவுக ; நுங்கரு
[...]ப்புறுகவென வாழ்த்துதற்பொருட்டாய் வரும் வியங்கோள் விகுதித்தாய பல
[...]ன் நும்மையாசீர்வதிக்கு மொன்றுவல்லனேயன்றி, யான் பிறவல்லனல்லன்.

வா - குலாம்காதிறு நாவலன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுருப்யோநமஃ

வாழ்த்து.

“வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெலாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே”

ஞானசாகரம்.

கேநோபநிடதமொழிபெயர்ப்பு.

முகவுரை.

‘வேதம்’ என்பது அறிவு எனவும் ‘உபநிடதம்’ என்பது மெய்ப்பொருள்தேறும் பொருட்டுச்சான்றோர் சூழீஇ இருக்கும் இருக்கைகளெனவும் பொருளுணர்த்தும். இருக்கைகளென்னும் பொருட்டாகிய‘உபநிடதம்’என்னுஞ்சொல் பின் அவ்விருக்கையிலிருந்து ஆராயும் மெய்ப்பொருளுணர்ச்சியைஉணர்த்தாநிற்கும். முதிர்ந்தவுணர்ச்சியுடையோர்க்கேவிளங்கற்பாலனவாகிய மெய்ப்பொருட்பெற்றி அறிவுறுக்குமியல்புடைமையானே அவை வேதமுடிபொருள் அல்லது ‘வேதாந்தம்’ எனவுஞ்சொல்லப்படும். வேதங்கள் மூன்று பகுதியாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவை மந்திரம், பிராமணம், உபநிடதம் என்பனவாம். அவற்றுள், மந்திரப்பகுதி பலவேறுற்றலுடையரான பலவேறு தேவர்களை வழுத்துகின்ற செய்யுட்டொகுதியுடையனவாய்த் தாழ்ந்த பக்குவமுடையார்க்கு விளங்குந்தன்மையவான தாழ்ந்த பொருள்களையும் உயர்ந்த பக்குவமுடையார்க்கு விளங்குந்தன்மையவான உயர்ந்த பொருள்களையும் ஆண்டாண்டு உரைப்பனவாம்; அவற்றுள், தாழ்ந்தபக்குவமுடையார்க்கு வேண்டுவனமொழிவது கருமமார்க்கமெனவும், உயர்ந்த பக்குவமுடையார்க்கு உரியனமொழிவது ஞானமார்க்கமெனவும் மற்றிரண்டு பகுப்புடையனவாம். இனி, இக்கருமமார்க்கம் ஞானமார்க்கமிரண்டற்கும் இடை நின்று கருமமார்க்கத்தின் நிற்பாரை ஞானமார்க்கத்தின்கட் செலுத்துவது உபாசனாமார்க்கமெனப்பெயர் பெறுநிற்கும். இனிப்பிராமணங்களென்பன வேதங்களிற் கருமமார்க்கங்களைக்

கூறுஞ்செய்யுட்களினையும், அக்கருமமார்க்கங்களிற் பொதிந்து கிடக்கும் நுட்பப்பொருளும் விரித்துரைப்பனவாம். இனி உபநிடதங்களென்பன, முழுமுதற் பெருங்கடவுளுக்கும் உலகியற்பொருளுக்குமுள்ள இயைபு கடைப்பிடித்தாராய்ந்து மெய்ப்பொருளுணர்த்திச் சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்தவிளக்க மெய்துவிப்பனவாம்.

இனி, ஈண்டு மொழிபெயர்த்துரைப்பானெடுத்துக்கொண்ட கேனோபநிடதம் தலவகாரம் எனவும் பெயர் பெறுகிற்கும். இதன்கண் மெய்ப்பொருளறியலுறும் வேட்கையுடையானோர் சீடன் நல்லாசிரியனையடுத்து 'கேநேஷிதம் பததி ப்ரேஷிதம் மந:' என உறுவது வினவ, அவ்வினவுதற் பொருண்மேல் இவ்வுபநிடதம் எழுந்ததாகலினிது கேன என்னும் பெயர்த்தாயிற்று. இது மிகப்பழையவான பன்னிரண்டு உபநிடதங்களுள் ஒன்றாம். இஃது அங்ஙனம் அவற்றுளொன்றாக வைத்துரைக்கப்படினும், அம்மற்றையுபநிடதங்களினும் இது மிகப்பழைதாதல் வேண்டுமென்பது ஒருதலை, என்னை? இவற்றின் பரப்பெல்லாம் ஒருங்குணர்ந்த ஆசிரியர் - நச்சினார்க்கினியர் வேதவியாதர் வகுக்கு முன்னிருந்த நூல்களுள் இத்தலவகாரத்தை இனிதெடுத்து மொழிந்திடுதலானும், அவ்வாறு ஏனைஉபநிடதங்களை மொழியாமையானுமென்பது. எனவே, பண்டைக்காலந்தொட்டு இன்றுகாறும் போதராநின்ற மெய்ப்பொருட் சமயநிலையுணர்தற்கு இவ்வுபநிடதம் இன்றியமையாப்பெருஞ் சாதனமாதல் தெற்றென விளங்கும். இஃது இத்துணைப் பெருஞ்சிறப்பின தாதல்பற்றியே சங்கராசிரியர் தாமுரைஎழுத வெடுத்துக்கொண்ட ஈசகேனகடப்பிரசின முண்டக தைத்திரிய மாண்டூக்கிய வைதரேய சாந்தோக்கிய பிருகதாரணிய உபநிடதங்களுளிதனையு மொன்றாக அகப்படுத்தார். அவர் இவ்வுபநிடதம் போதிக்குஞ் சமயப்பெற்றிதேர்ந்து அதற்கேற்ப உரையுரையாது தாம் வேண்டியவாறே தமது ஏகான்மவாதப்பொருட்டிறம் பற்றி ஆண்டாண்டுச் செய்யுட்களை நலிந்து பொருள்கொண்டு வாளாபோயினார். அதுநிற்க.

இனி இதனைக்கிடந்தவாறே எடுத்து மொழிபெயர்த்து அதன்மேல் உரையுரைப்ப விழைவுகொண்டு இங்ஙனந்தமிழ்ச்செய்தாம். முதனூற் சுலோகங்கள் மிகச்சுருங்கிய சொற்களாற் பொருளறிவுறுத்துச் செல்கின்றமையின், அவற்றை அங்ஙனமே சுருங்கமொழிபெயர்த்தல் மலைவுதருதல் பற்றி அவாய் நிலை தகுதி அண்மைகளால் ஆண்டாண்டு விரிக்கப்படுஞ் சிலசொற்றலைப்பெய்து மொழிபெயர்த்திட்டாம். அங்ஙனம் மொழிபெயர்த்தும் ஒருசில வாக்கியங்களுள் முன் பின்னுள்ள இயைபு விளங்குதற்கரிதாகவே கிடப்பதாயிற்று. இக்குறைபாடு முன்னை ஆரியமொழி நூல்கட்கு இயற்கையாவதொன்றாம். இதனை இங்ஙனம் மொழிபெயர்க்கின்ற காலையில் வடநூற்சுலோகங்களில் ஐயம் வந்துழியெல்லாம் டாக்டர் ரோர் என்பவர் ஆங்கிலமொழியிற்றிருப்பிய மொழிபெயர்ப்பு எமக்கு

உறுதுணையாயிருந்தது. இன்னும் இதன்கட் டிருத்தங்கள் செய்து மொழிபெயர்ப்பினருமையை உயர்த்தவல்ல சான்றோர் அத்திருத்தங்களை எமக்குத் தெரிவிப்பாராயின் அவற்றைக் கழிபேருவகையுடனேற்றுக்கொண்டு அவர்க்கு நன்றி பாராட்டுங்கடப்பாடு பெரிதுடையமாவேம்.

இனி இக்கேனோபநிடதத்தின் மேல் விரிந்தவுரையொன்று ஐந்தாமிதழிற் பொறிக்கப்படும்.

முதற்கண்டம்.

(சீடன்வினா):—எவராற்கட்டளையிடப்பட்டும் நிலை நிறுத்தப்பட்டும் மனமானது விரைந்து இயங்குகின்றது? எவரால் விதிக்கப்பட்டுப்பிரதம பிராணனானது தொடர்புற்று வருகின்றது? எவராற் கட்டளையிடப்பட்டுச் சொல் மொழியப்படுகின்றது? எந்தக்கடவுள் கண்ணையுங் காதையுந் தத்தம் நிலையில் நிறுத்துகின்றார்? (௧)

(ஆசிரியன்விடை):—செவியினுட் செவியாயும், உள்ளத்தினுள் உள்ளமாயும், சொல்லினுட் சொல்லாயும் இருக்கும் முதல்வனே உயிர்க்குயிராயும் விழிக்கு விழியாயும் மெய்பெற விளங்குகின்றான். பற்று நீங்கி உலகைத்துறந்து செல்லும்போது அறிவுடையோர் மரணத்தைக் கடக்கின்றார்கள். (௨)

அவனை விழியும் வாக்கும் மனமுஞ்சென்று அணுகமாட்டா. அவனை நாம் அறியலாகாமையாற் சீடனுக்கு அவனியல்பை யுணர்த்துமாறும் நாம் அறியோம். அறியப்படு பொருளின் அது வேறாக உள்ளது. அற்றேல் அறியப்படாத பொருளே அதுவாமென நீயுரைப்பின், அஃது அறியப்படாத பொருளையுங்கடந்து செல்வது. எமக்கு அதனை விளக்கிய தொல்லாசிரியர் இங்ஙனம் உரைப்பக்கேட்டேம். (௩)

சொல்லினால் வெளிப்படுவதன்றாய்ச் சொல்லைத்தான் வெளிப்படுத்துகின்ற அந்தப்பொருளைப் பிரமமென்று நினைந்திடுக, இதுவென்று நினைந்து உபாசிக்கப்படும் அதனை அவ்வாறு நினையற்க. (௪)

மனத்தால் தான் நினைப்பதன்றாய்த்தன்னால் மனம் நினைக்கப்படுகின்றது என்பவாகலின் அந்தப்பொருளைப் பிரமமென்று அறிக, இதுவென்று நினைந்து உபாசிக்கப்படும் அதனை அவ்வாறு அறியற்க. (௫)

கண்ணினால்தான் காண்பதின்றித் தன்னாற் கண்களைக் காண்பராகலின் அந்தப்பொருளைப் பிரமமென அறிந்திடுக; இதுவென்று நினைந்து உபாசிக்கப்படும் அதனை அவ்வாறு அறியற்க. (௬)

செவியினால் தான் கேட்பதின்றிச் செவியைத்தான் கேட்பிக்கும் அந்தப்பொருளைப் பிரமமென அறிந்திடுக; இதுவென்று நினைந்து உபாசிக்கப்படும் அதனை அவ்வாறு அறியற்க. (௭)

பிராணனாற்றான் உயிர்ப்பதின்றிப் பிராணனைத் தான் உயிர்ப்பிக்கும் அந்தப்பொருளைப் பிரமமென அறிந்திடுக; இதுவென்று நினைந்து உபாசிக்கப்படும் அதனை அவ்வாறு அறியற்க. (அ)

இரண்டாங்கண்டம்.

நான் அப்பிரமத்தை நன்றாயறிவேனென்று நீ நினைப்பையாயின், ஆன்ம வியல்பொடு சார்த்திப் பிரமசொரூபத்தை நீ அறிவதூஉம், தேவர்களுடன் வைத்து அதன்சொரூபத்தை நீ அறிவதூஉம் உண்மையிற்குறைபாடுடையனவாம். ஆதலால், இன்னும் அது நின்னாற் சிந்திக்கப்படுதல் வேண்டும். (க)

(சீடனுரை) அவன் அறியப்படு பொருளென நான் நினைப்பதல்லாமல், அவனை நன்கு அறிவேனென்று நான் நினைக்கின்றிலேன். ஆயினும் அவனை அறியேனென்று நானறியேன். எம்மனோரில் யாவராயினும் 'நான் அவனை அறியேனென்று நான் அறியேன்' என்று அறிவாராகில், அவர் அவனை அறிபவராவர். (உ)

பிரமம் அறியப்படுபொருளன்று என்று நினைபவனாற் பிரமம் அறியப்படுகின்றது; பிரமம் அறியப்படு பொருளேயாமென்று நினைபவனால் அஃது அறியப்படுவதில்லை. பிரமம் தன்னை அறிய விழைவோர்க்கு அறியப்படாதாகின்றது. தன்னை அறிய விழையாதவர்களுக்கு அறியப்படுவதாகின்றது. (ஙூ)

நினைக்கப்படுவன ஒவ்வொன்றும் அவனேயாம் என்று அவன் றன்மை யறியப்படுமாயின் அவனறியப்படுகின்றான். அவ்வறிவால் ஒருவனுக்கு இறப்பில்லாமை சித்திக்கின்றது. ஆன்மாவால் ஆற்றல் சித்திக்கின்றது. அறிவால் மரணமில்லாமை சித்திக்கின்றது. (ச)

இவ்வுலகில் ஒருவன் தன்னை அறிவானாயின், உண்மைப்பயனெய்துகின்றது; இவ்வுலகில் அங்ஙனம் ஒருவன் அறியானாயின் பெருந்துன்பமுண்டாம். எல்லாப் பூதங்களினும் அந்தர்ப் பூதமாயிருக்கின்ற பிரமசொரூபத்தையறியுமறிவுடையோர், இவ்வுலகைத் துறந்துசெல்லும்போழ்து மரணத்தைக்கடந்தவராகின்றார். (ரு)

மூன்றாங்கண்டம்.

தேவர்கள் பொருட்டுப் பிரமமானது ஒருகாலத்து வெற்றிகொண்டது; பிரமத்தின் வெற்றியால் தேவர்களெல்லாரும் பெருமையடைந்தார்கள். அவரெல்லாம் எமக்கு இந்தவெற்றி உரியது, எமக்கு இந்த வெற்றியுரியது என்று நினைவாராயினர். (க)

அவர்களுடைய அத்தன்மையும் அவன் அறிந்தான்; அவர்களுக்கு முன்னேதானே தோன்றினான்; அவர்கள் அவனை அறியவில்லை. இவ்வியக்கன்வழிபடற்பாலனோவெனத் தம்முள் வினாயினார். (௨)

'ஜாதவேத! இவன்வழிபடற் பாலனோ வென்பதைத் தெரிந்து கொள்க' என அவர்கள் அங்கியங்கடவுளுக்குச் சொன்னார்கள். (௩)

அவன் அவனிடத்தே விரைந்துசென்றான். அவன் 'நீயார்?' என்று கேட்டான். நான் உண்மையான அக்நி, நான் உண்மையான ஜாதவேதன் என்று விடைகூறினான். (௪)

'அத்தன்மையோனான உனக்கு என்ன ஆற்றல் உண்டு?' என அவன் வினாதலும், 'நான் இந்நிலவுலகத்திலுள்ள எதனையும்எரித்துவிடமாட்டுவே' னென்றான். (௫)

அவனுக்கெதிரில் அவன் ஒருதுரும்பை எறிந்து 'இதனைக்கொளுத்துக' என, தன் முழு ஆற்றலோடு அதனை அணுகியும் அவன் அதனைக் கொளுத்தக்கூடவில்லை. உடனே அவன் திரும்பிவந்து 'இவன்வழிபடற்பாலன்றானோவென்பதை நான் தெரிந்துகொள்ளக்கூடவில்லை' என்றான். (௬)

பின் அவர்கள் வாயுவைநோக்கி 'வாயு! இவ்வியக்கன் வழிபடற்பாலன்றானோவென்பதை அறிந்துகொள்க' என, அவனும் 'அவ்வாறாகுக' என்றான். (௭)

அவன் அவனிடத்தே விரைந்துசென்றான். அவ்வியக்கனும் 'நீயார்?' என்றான்; அதற்கு அவன் 'நான் உண்மையான வாயு, நான் உண்மையான மாதரிஸ்வன்' என்றான். (௮)

அதன்மேல், 'அத்தகையனான நீ எவ்வகையான ஆற்றலுடையாய்?' என, அவன் 'இந்நிலவுலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் அரித்துக்கொண்டுபோகமாட்டுவேன்' என்றான். (௯)

அதன்மேல், அவனோர்துரும்பைக் கிள்ளி அவனெதிரேயிட்டு 'இதனை அரித்துக்கொண்டு செல்க' என்றான். அவனுந் தன் முழு ஆற்றலோடும் அதனை அணுகியும், அவன் அதனை அரித்துக்கொண்டு செல்லக் கூடவில்லை. அதன்மேல், அவன் திரும்பச்சென்து 'இவ்வியக்கன் வழிபடற்பாலன்றானோ' வென்பதை நான் அறியக்கூடவில்லை என்றான். (௧0)

பின் அவர்கள் இந்திரனை நோக்கி 'மகவானே! இவ்வியக்கன் வழிபடற்பாலன்றானோ வென்பதைத் தெரிந்துகொள்க' என அவனும் 'அவ்வாறாகுக' என்றான். இந்திரன் அவனிடத்து ஓடுதலும் அவ்வியக்கன் அவனெதிரே மறைந்துபோயினான். (௧௧)

இனிது அலங்கரிக்கப்பட்டவளும் இமவான் புதல்வியுமான உமையென்னும் ஒரு பெண்மகளை அங்கு அவன் ஆகாயத்திற் கண்டான். கண்டு 'அம்மே! இவ்வியக்கன் வழிபடற்பாலனே' என வினவினன். (கஉ)

நான்காங்கண்டம்.

அவள் அது பிரமம் என மொழிந்தாள்; அப்பிரமத்தின் வெற்றியினாலன்றே நீவிர் உண்மையான பெருமை யெய்தினீர் எனவுங் கூறினாள். இவ்வாறு இந்திரனும் பிரமத்தை உணர்ந்தான். (க)

அதனாலன்றே அங்கி, வாயு, இந்திரன் முதலான தேவர் மற்றைத் தேவரினும் மேம்பாடு பெரிதடைந்தார்; என்னை? அவர்கள் ஒருவாறு பிரமத்தைத் தொட்டார்கள், பிரமத்தை முதலி லறிந்தார்களாதலின். (உ)

அதனாலன்றே இந்திரன் மற்றைத் தேவரினும் மேன்மை பெரிது எய்தினன்; என்னை? அவன் ஒருவாறு அந்தப் பிரமத்தைத்தொட்டான், அவன் அந்தப் பிரமத்தை முதலிலறிந்தானாதலின். (ங)

இஃது அவனைக்குறித்துரைக்கும் உறுதிமொழியாம். அவன் மின்னலொளிபோற் சுடர்ந்து திகழ்ந்தான். அவன் கண்ணிமை முகிழ்ப்பிற் கரந்து போயினன். இதுவே அவனை ஏனைத்தேவர்களொடு குறிப்பிட்டு அறியுமாறு. (ச)

இனி அவனை ஆன்மாவொடு குறிப்பிட்டறியுமாறு சொல்லப்படுகின்றது. மனமானது இதனை அணுகி யெய்துகின்றது, மனத்தினாலேயே ஒருவன் அவனை நினைகின்றான், மனத்தினாலேயே அவன் பின்னும் பின்னும் தேறப்படுகின்றான். (ரு)

அவன் ஆன்மாவாலறிந்து வழிபடற்பாலன். அவன் வழிபடற்பாலதன் பெயரால் வழிபடற்பாலன். இவ்வாறு அதனை அறிகின்றவனை எல்லா உயிர் வருக்கங்களும் உபாசிக்கின்றன. (சு)

(சீடன் வினா.) 'ஓ! சால்புடையீர்! உபநிடதத்தை மொழிந்திடுக.' என, (குரவனும்) உபநிடதமானது உனக்கு அறிவிக்கப்பட்டது, பிரமத்தைச்சுட்டி யாராயும் உபநிடதத்தை உனக்கு நாம் விரித்து விளக்கினோம் என்றான். (எ)

அதனை அடைதற்குரிய கன்மங்களாவன தபம், தமம் முதலியனவாம். வேதங்கள் தம் அங்கங்களோடு அதற்கு ஆதாரமாம், வாய்மை அதன் உறையுளாம். (அ)

அவ்வாறு அதனை யார் உணருகின்றார்களோ அவர்கள், எல்லாப் பாவங்களையுங் கழுவியபின் என்றுமுள்ளதாய்த் திப்பியமுடையதான வீட்டுலகத்திற் சென்று வைகுவர். (கூ)

இவர் அத்தேசிகரிடத்து நீழலேபோல் விளங்கிச் சித்தாந்த சைவசமய குரவராக விருப்பதனைக் கண்ணுற்ற திருவதிகைப்பதியில் வாழ்க்கையுடையராய மனவாசகங்கடந்தாரென்பார் தாமும் விரைந்தடைந்து அவர்பாலருளுபதேசம்பெற்றுச் சிவாகமத்துள்ளுறுபொருளாகிய தசகாரியத்தைத் தமிழுலகமுய்ய வுண்மைவிளக்கமெனப் பெயர்நிறீஇயருளிச்செய்தனர். இதுகிடக்க.

அருணந்திதேசிகர் திராவிடவேதச் செம்பொருளாகிய சிவஞானபோதத்தின் வழிநூலாகிய சிவஞானசித்தியையும் இருபாவிருபதையும் தம்மைத் திருக்கடந்தையில் வைதிகசைவ மறையோர் மரபிற்றோன்றிய மறைஞானசம்பந்தரென்பார் வினையொப்பும் மலபாகமுந் தீவிரசத்திபதிவுமெய்தியடைய அவருக்குத் தாம் அருளுபதேசஞ்செய்தனர். அம்மறைஞானசம்பந்தரோ விராட்புருடனுக் கிதயத்தானமாகிய சிதம்பரத்தைச்சேர்ந்த திருக்களாஞ்சேரியிற் சிருங்காரவனத்திற் பிரமபுரீசர் சந்நிதிக்கணெழுந்தருளி யிருந்துகொண்டு "நெக்குநெக்குள்ளுருகியுருகிநின்றுமிருந்துங் கிடந்துமெழுந்து, நக்குமழுதுந் தொழுதும் வாழ்த்தி நானாவிதத்தாற் கூத்துநவிற்றிச், செக்கர்போலுந் திருமேனிதிகழநோக்கிச் சிலிர்சிலிர்த்துப் புக்குநிற்" பாராய் அத்திருப்பதியெங்கணுஞ்சஞ்சரித்து வந்தனர்.

இவ்வாறு நிகழ்கையில் ஒருநாள் ஒரந்தணரகத்துத் தெருப்புறத்தே தாம் பிச்சையேற்றுழித் தில்லைவாழந்தணருளொருவராகிய உமாபதிசிவம் சிவிகையூர்ந்து மங்கலகோட்டத்தொடு பகல்விளக்கேந்திவரப் பரிவாரத்தொடுஞ் சென்றனர். அவரைக்கண்டாங்கு ஞானதேசிகர் புன்முறுவலொடும் பகற்குருடன் செல்கின்றனனென விளிப்ப அதனைக் கண்ணுற்ற தீக்கிதர்பெருமான் சிவிகையினின்றிழிந்து ஓடோடியும் வந்து கண்டுறப்புநிலனுறப்பணிந்து நின்றவர் மிசைந்துகொண்டிருந்த அடிசின்மிச்சினுகர்ந்தனர். அன்னுழி அவர்க்கிருவினையொப்பு மலபாகமுந் தீவிரதரச் சத்திநிபாதமுமெய்திய தோர்ந்து அற்றைமுதற் றம்மையிடைவிடாது நிழல்போலடைந்த அத்தில்லைவாழந்தணர்பெருமாற்கு வேத சிவாகமங்களிற்றுணிந்தசைவவோபநிடதப் பயனாகிய மாவாக்கியத்தினையருளுபதேசஞ்செய்தனர்.

அதைப்பெற்றுத் தில்லைப்பதியைச்சார்ந்த கொற்றவன்குடியில்வீற்றிருந்துபிறர்தம்மையோரந்தணனெச்சினுகர்ந்தானென்றசதியாட்டயர்வதனைச்செவிக்கொளாது எழுமையுந் தொடர்ந்தபாசமோசனஞ்செய்தகுருமணியினருளைவியந்துநிட்டைகூடிப்பவுட்கராகமவிருத்தியுந், தங்குருமுதல்வரருளிச்செய்தசெந்தமிழ்ச்சிவஞானபோதத்திராவிடசுருதிக்கு வழிநூலாகச்செய்த சிவஞானசித்தி மிக விரிந்திருப்பதுணர்ந்து அதனையாருந்தெளிந்துணரச் சார்புநூலாகப் பிரகாசமெனப் பெயர்நிறீஇயோர்நூலும், அறம்பொருளின்பமெனத் தொகுத்த தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்போன்று முப்பொருளுண்மை மும்மையுலகமுந் தேரத் திருவருட்பயனு மருளிச்செய்தனர். பின்னர்த் தசகாரியத்தை விளக்கு முண்மை ,நெறிவிளக்கமும் போற்றிப்பஃறொடையும் வினாவெண்பாவும் பாடித் தம்மையடைந்தார்க்கினிதருளிச்செய்தருளினர்; இதுகிடக்க. இவர்தம்மாசிரியராகிய மறைஞானசம்பந்த சிவாசாரியர்பால் நேத்திரரூபமாயுள்ள நெஞ்சுவிடுதூதென்பது பாடியதன்றி அருணமச்சிவாயதேசிகர் முதலாயோர்க்கருளுபதேசஞ்செய்து சித்தாந்தநெறியினராகிய மெய்கண்ட சந்தானத்தை வளர்த்துவருவாராயினர். அஞ்ஞான்று தேவ தேவேசராகிய அம்பலவாணப்பெருமான் திருவிழாவிற் கொடியெழா திருப்பக்கண்டுதில்லைவாழந்தணரானவருநனிதவவருந்தக்கண்டுகொடிக்கவிபாடிக் கொடியேற்றியருளினர். சின்னாட்பின்னர் ஆனிவிழாநடக்குஞான்று தேர்

மண்டபத்தின் மாயாவாதி, ஐக்கியவாதி, பாடாணவாதி, பேதவாதி, சிவசமவாதி, சங்
கிராந்தவாதி, ஈசுரவவிகாரவாதி, நிமித்த காரணபரிணமவாதி, சைவவாதி, என்னுஞ்
சமயிகள் தத்தஞ்சமயத்தை யெடுத்துரைத்துச் சங்கற்பங்கூறக்கண்ட உமாபதிசிவனார்
அவர்கூற்றைக்குறித்து நிராகரித்துச் சங்கற்பநிராகரண மென்றருளிச்செய்து பரவச்
செய்தனர்; அது செய்தருளிய காலம் சாலிவாகனசகம் 1235. இதுகிடக்க.

ஞானதேசிகர்பிற்றைஞான்று திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை இவற்றை
யருளிச்செய்துசிதம்பரமான்மியத்தின் வழியாகக்கோயிற்புராணமென்றொருதெய்விக
நூலருளிச்செய்து அரங்கேற்றாது பேடகத்திட்டிருந்தஞான்று, ஆளுடைய நம்பிகள்
திருத்தொண்டத்தொகையில் 'பூதம்யாவையினுள்ளலர்போதென-வேத மூலம் வெளிப்
படுமேதினிக் - காதன்மங்கையிதயகமலமா-மாதொர்பாகனாரூர்மலர்ந்ததால்" என்று
ரைக்கப்படும் திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானுலடியெடுத்துக்கொடுக்கத் திருவாய்
மலர்ந்தருளப்பட்டதில்லைவாழந்தணர் தஞ்சொப்பனத்துட் கனகசபேசராகிய ஆனந்தத்
தாண்டவராச ரெழுந்தருளி "யாங்கொற்றவன்குடிஉமாபதிபேடகத்துளேம்" எனத்திரு
வாய்மலர்ந்தருள அதைக்கேட்டாங்கெழுந்து இஃதொப்பதோர் இறும்பூதெஞ்ஞான்
றும் பெற்றிலோமென்றவரை யெய்தி வருவித் தாயிரக்கான்மண்டபத்து அதனை யரங்
கேற்றுவித்தனர். இதுகிடக்க.

உண்மைநாயன்மார் தெய்வமான்மியத்தைமிகவரியசெந்தமிழ்யாப்பானருளிச்செய்த
அருண்மொழித்தேவர் புராணத்தையும், திரவிடசுருதியாகிய திருமுறைகள் வெளிப்
பட்டமை யுணர்த்தும் திருமுறைகண்ட புராணத்தையு மருளிச்செய்து வீற்றிருந்த
ஞான்று பெற்றான் சாம்பானென்னும் புறத்தொண்டரொருவர்க்கு ஆளுடையபெரு
மான் 'அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்சொற்றங் - குடியார்க்கெழுதிய கைச்சீட்டுப்-
படியின்மிசைப் - பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து - முத்திகொடுக்
கமுறை' என்னுந் திருமுகமொன்றருளிவிடுப்ப இன்னே யவர்பரிபாகநோக்கிச் சிவசா
ரூபிப்பியமுதவி நின்றனர். அவன்மனைவியுந் தன்கணவன் சிவசாரூப்பியமெய்தினமை
நோக்காது தேசிகர் திருநோக்காற்பெறலரும் பேறெய்தியமை அரசன் றிருமுன்ன
ரறிவிப்ப அரசன் ஞானதேசிகரையடைந்தவர் சந்நிதிமுன்னர் அவன்பேற்றையுணர்த்
தினர். அரசர்பெருமானு மவன்மனைவியும் பிறரு நிதரிசனமாகக் காணப் பரிபாகமெய்
தியிருந்த அசேதனப்பொருளாகிய முள்ளிச்செடிக்கு மவ்வாறே ஞானநோக்கினான்
முத்திகொடுத்தருள யாவரும் எல்லையில்லதோ ரற்புதமெய்திச் சிறந்தனர். பிற்றை
ஞான்றொருநாள் கல்விகேள்விகளிற் சிறந்தார்பலர் 'கல்விகரையிலகற்பவர்நாட்சில -
மெல்லநினைக்கிற்பிணிபல' எனப்படுதலான் யாதினைக்கற்றுச் சில்வாழ்நாட் பல்பிணிச்
சிற்றறிவே முய்வேமென்று விண்ணப்பிக்க, அவர் "வள்ளுவரன்பர் மொழிவாசகந்தொல்
காப்பியமே தெள்ளுபரிமேலழகர்செய்தவுரை - யொள்ளியசீர்த் - தொண்டர்புராணந்
தொகைச் சித்தியோராறுந்-தண்டமிழின் மேலாந்தரம்' என்றருளிச்செய் தவராசங்கை
தவிர்த்தருளினார். இன்னனபல வற்புதங்களனைத்தும் விளைத்துச் சிற்சபேசன் றிருவடி
நீழலிற் புக்கொடுங்கினர். இச்சந்தானகுரவர் முறையே சிவபரிபூரண மடைந்த தலங்
கள், திருவெண்ணெய்நல்லூரும், திருத்துறையூரும், திருக்களாஞ்சேரியுங்கொற்றவன்
குடியுமேயாம். அவரடைந்த நாட்களைச் 'சித்திரையத்தமுமாபதியாவணித்திங்கடனி -
லுத்திரஞ்சீர்கொண் மறைஞான சம்பந்தரோ துகன்னிச் - சுத்தமெய்ப்பூர மருணந்தி
யைப் பசிசோதிதனில் - வித்தகமெய்கண்டதேவர் சிவகதிமேவினரே' என்றபியுத்தரு
மருளிச்செய்திருக்கின்றனர்.

திருமயிலை - சண்முகம்பிள்ளை.

கந்தபுராணம்.

கல்லகங்குடைந்தசெவ்வேற்கந்தனோர்தருவதாகி
வல்லியர்கிரியைஞானவல்லியினிளையாய்ச்சூழப்
பல்லுயிர்க்கருளைப்பூத்துப்பவநெறிகாய்த்திட்டன்பர்
எல்லவர்தமக்குமுத்தியிருங்கனியுதவுமென்றும்.

கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படலத்திலுள்ள இச்செய்யுளிற் "பவநெறி" என்பதன்பொருளைப்பற்றி இப்பொழுதை நாவலர் சிலர்க்கும் பௌராணிகர் சிலர்க்கும் வாதம் நிகழ்ந்தது. நாவலர்கள் பவம் சம்பவம் என்பன ஒருபொருட் கிளவிகள் எனவும், சம்பவம் என்பது உண்மையை உணர்த்தும் எனவும், எனவே பவநெறி என்பதற்கு ஞானவழி என்பது பொருளாகும் எனவும், பிறவிநெறி எனக்கூறுதல் பொருந்தாது எனவும், அருளைப்பூத்து என்புழிப் பிறவிநெறி அடங்கும் எனவும் கூறினர். பௌராணிகர் பிறவிநெறி எனக்கூறுதலே பொருந்தும் என்றனர்,

சித்தியார்.

கேவலஞ்சகலஞ்சுத்தமென்னுமூன்றவத்தையான்மா
மேவுவன்கேவலந்தன்னுண்மைமெய்ப்பொறிகளெல்லாங்
காவலன்கொடுத்தபோதுசகலனுமலங்களெல்லாம்
ஓவினபோதுசுத்தமுடையனுற்பவந்துடைத்தே.

திருநெல்வேலிப்புராணம்.

தோன்றுமுயிர்கேவலசகலசுத்தமெனவேசுழலவத்தை
மூன்றுவிதங்கேவலங்கருவிமுற்றுமகன்றேயிருள்வழியில்
ஆன்றபொருளையறியாமையப்பாற்சகலஞ்சிருட்டிதொடுத்
தேன்றமுறைசங்காரமதிற்பிறந்துமிறந்துமுழல்வதுவே.

தொகுத்தமலபாகம்வரவேசூழும்வினைகளிரண்டுமொப்பின்
மகத்வமுறுசத்திநிபாதம்வயங்கவரன்சற்குருவாகிச்
சகத்திலருளக்கேவலமுந்தவிராதிருக்குஞ்சகலமுந்தான்
அகத்தின்மலநீங்குவதுசுத்தமாமென்றுரைப்பாரறிந்தோரே.

என்பவைகளிற் கூறப்பட்ட இயல்புடைய கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று நிலைகளினும் முறையே இறைவன் உயிர்க்குச்செய்யும் உபகாரத்துவம் இங்கே கூறப்படுதலானும், இருளாகிய ஆணவத்திலே கிடக்கு மான்மாக்களை வெளியாகிய பிறவியில் வருவித்தே பாகமாக்கி மோக்கங்கொடுப்பாரென மெய்ந்நூல்கள் கூறுதலானும் "பிறவிவழி" என்னும் பொருளே பொருத்தமுடையதாகின்றது. மேலும் பவம் சம்பவம் என்னும் இரண்டும் ஒருபொருட்கிளவிக ளாதற்குப் பிரமாணமுங் காணப்படவில்லை.

அருளைப்பூத்தென்றது உயிர்கள் ஆணவவிருளினாலே அணுத்துவமுந் தன்வயமின்மையும் பூண்டு ஒன்றுமறியாது தடுமாறி நின்றிடருழத்தலைக்கண்டிரங்கி அவைகளை வெளியில் வருவிக்குமாறு நினைத்த இச்சாமாத்திரையினையேயாம். இவ்வருள்காய் தோன்றுதற்குக் காரணமாக முன் வெளிப்பட்ட பூவினைப்போலக் காணப்படுதலாற் பூவென ஆரோபிக்கப்பட்டது. இதனாற் கேவலநிலையிலே உபகரித்தல் கூறினார். கேவலம் - தனிமை. மேற்படி சித்தியாரில் "தன்னுண்மை" என்பதற்குத் "தான்

மாத்திரையேயுளனுதல்'' என்ற உரையும் இதனை நிலைபெறுத்தும். இச்சாசத்தி சம்பந்தமாகிய இதனுட் கிரியாசத்தி சம்பந்தமாகிய பிறவி அடங்காமையுமுணர்க.

பவநெறியென்றது இருளினின்றும் நீக்கி அவ்வுயிர்களுக்குச் சரீரத்தினையும், அதனைச்சார்ந்த இந்திரியம் முதலிய கரணங்களையும், சரீரத்திற்கிடனுய புவனங்களையும், புவனங்களினின்று புசிக்கப்படும் போகங்களையுங் கொடுத்து மருணீக்குதற்குத் தக்கனவாக்கும் வழியையேயாம். இதுவே பிறவிநெறி. இது பூவினின்றுந் தோன்றிய காய்போலப் பயன்படுதல்பற்றிக் காயென ஆரோபிக்கப்பட்டது. இதனுற் சகல நிலையில் உபகரித்தல்கூறினுர். சகலம் - கலைமுதலியவைகளோடு கூடியது. ''சாக்கிரங் கலாதி சேர்ந்த சகலமாம்'' என்னுஞ் சிவப்பிரகாசத்தினுலும் இது நிலைபெறும். இறைவர் அருள்கொண்டே பிறவியில் வருவிப்பாரெனப் பலநூல்களுங் கூறும்.

சிவப்பிரகாசம்.

எண்ணரிதாய் நித்தமா யிருண் மலத்தி லழுந்தி
இருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை
அண்ணலரு ளானண்ணி யவையவரா யதனுல்
அலகினிகழ் போகங்க ளருந்து மாற்றுல்.

போற்றிப்பஃறெடை.

கண்ணை மறைத்த கடியதொழி லாணவத்தால்
எண்ணுஞ் செயன்மாண்ட வெவ்வுயிர்க்கும்—உண்ணடிக்
கட்புலனுற் காணுர்தங் கைக்கொடுத்த கோலேபோற்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண்—முற்பாற்
றனுகரணமும் புவனமுந் தந்து.

ஒருபாவுண்மையுபதேசவுரை.

''உன்பெருங்கருணையைமறந்துமலமயமாகி
ஒளியிழந்தறிவுமாழ்கி
உமிமூடுநெல்லெனக்களிம்புதோய்செம்பென்ன
உவருடையளக்கரென்ன
வன்பெரும்பாந்தள்வாய்மணியெனத்தீயுண்ட
வல்லிரும்பென்னநாளும்
மறைவுண்டிருந்தவெனைக்கருணையாற்சகலத்தில்
வருவித்துவினைவயத்தால்''

இங்ஙனம்வரும் பிரமாணங்களும் அருள்பூத்துப் பிறவியிலே விடுத்தலைப் புலப்படுத்தும். பிறவியில் விடாமல் மலமொழித்தலும் பொருந்துமா? ''புகலுமலமொழித்தற்குக் கலாதிமுதன் மாயைபொருந்தியிடு மரனருளால்'' என்பது சிவப்பிரகாசம்.

சுன்னுகம்
பிலவஙு
பங்குனிமீ

இங்ஙனம் :
அ. குமாரசுவாமிப்பிள்ளை.

மொழிந்திடுவாராயின் அதன்கண் நம்பகஞ்சிறிது குன்றித்தோன்றா நிற்கும். இவ்வாறே ஒருவர் ஒருவர்க்கு உரைப்ப வருகின்றனவெல்லாம் முறைமுறையே நம்பகங்குறையத் தோன்றா நிற்கும். இனி ஒருசம்பவத்தைக்கேட்டோர் உரைத்தவாறே அதனைக்கண்டிருந்தோரும் பொருந்தவுரைத்திடுவாராயின், அது மெய்ம்மைமிகவுடைத்தாய் உலகத்தின்கட் பரந்தவழக்கமுற்று ஆன்றோராற்பாதுகாக்கப்படும் ஆசாரமாய்நிலையுதலுறும். இங்ஙனம் பரந்துபட்டவழக்காய் வரும் மெய்ம்மைச்சம்பவங்களையே குறிப்பிட்டு ஆங்கிலநூலாருந் தேசசரிதங்களெழுதுகின்றனர். அவரெழுதுகின்ற அத்தேசசரித நூல்களின்கண்ணெல்லாம் எந்த நிரீசுரவாதிகளும் ஐயுறவுகொள்ள இடம்பெறார். சீசர் என்னும் ஓர் அரசர் ஆயிரத்தெழுநூறு வருடங்களின் முன் உரோம் நகரத்திற் செங்கோலோச்சினாரென்பது அவர் செதுக்கிய சிலகல்வெட்டுக்களால் இனிதுணரப்படுமென்றால் அதன்கண் ஐயுறுவார் யாருமிலர். இதுபற்றியன்றே தருக்கநூலாரும் சத்தப்பிரமாணமெனவொன்று சிறந்தெடுத்துக்கொள்வாராயினர். இதுநிற்க.

இனி, இங்ஙனங்காட்டிய சரிதமுறைக்கிணங்கவே, எம்முடைய ஞானசம்பந்தப்பெருமானார் தாம் நிகழ்த்திய அரும்பேரற்புதங்களைத் தம்அருமைத்திருப்பதிகங்களிற் கட்டளையிட்டருளுதலும், பிள்ளையாரோடொருங்கிருந்து அவ்வற்புதங்களை நேரேகண்டிருந்த தோலாநாவின் மேலோராகிய அப்பமூர்த்திகளுந் தம்அன்புமயமான பதிகங்களிலவற்றைக்கட்டளையிட்டருளுதலும், இங்ஙனம் மெய்ம்மைகொண்டு நிகழ்ந்த அற்புதசம்பவங்கள் சுந்தரமூர்த்திகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார்நாயனார், உமாபதிசிவாசாரியார், தாயுமானார் முதலான சிவானுபூதிப்பெருந்திருவாளரான சான்றோரான் மொழியப்படுதலும், அங்ஙனம் மொழியப்படுதலாற் பரந்துபட்ட உலகியல் வழக்கும் ஆன்றோராசரமுமாய்ப் பாதுகாக்கப்படுதலுந் தேர்ந்துணரவல்லையாயின் மேன்மேல் வரம்பிறந்தோடும் ஆசங்கை நிகழ்த்தி மலைவாயல்லை. இனி இங்ஙனங்காட்டிய சத்தப்பிரமாணங்களையுங் கடந்து விவகரிக்கத் துணிவையாயின், நீ உலகத்தாராற் பித்தனென்று எள்ளப்படுவாயென்று இங்ஙனம் வைத்துயாம் விளக்குதலும், நிரீசுரவாதியாரால் ஏவப்பட்ட புத்தியுடையனான அம்மாணாக்கன் நுணுகியாராய்ந்து யாம் உரைத்தவெல்லாம் வாய்மையேயென உளங்கொண்டு போயினானாகலின், யாமெடுத்துக்கொண்ட சகளோபாசனையியல் வழாது மேலும் ஆராய்ந்து செல்வாம்.

இதுகாறும் யாமெடுத்து விவகரித்த வாதமுடிபொருளாய்ப் பெறப்படுவன யாவையோவெனின், ஆரியகண்டவாசிகளாகிய யாமெல்லாஞ் செய்து போதருஞ் சகளோபாசனை ஈசுரன் ஓரோர் காலத்து ஓரோரன்பர்க்கு அனுக்கிரகிக்கும் பொருட்டுக் கருணையே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளிவந்த திருக்கோலக்குறிப்பு விளங்க அமைத்து நிறுத்திய ஆலயவழிபாடாய் அவ்வழிபாடுவாயிலாகவே எம்முணர்வை இழுத்துச்சென்று ஈசுரன்மாட்டுப் பதியவைக்குங் கருவியா மென்பதூஉம், இங்ஙனம் ஈசுரன் கருணைக்கோலத்தை அறிதரற்குரிய புண்ணியமுகிழ்ப்பு இல்லாத அநாரியகண்டவாசிகள் தத்தமக்கறிவு சென்றவாறெல்லாங் கல்லானுஞ் செம்பானும் இயற்றிக்கொண்டு வழிபடும் அவரது வழிபாடு அவ்விக்கிரகங்கண்மேற் கடந்துசென்று ஈசுரன் உண்மைக் கருணைக்கோலத்தின்கண் அவரறிவைப் பதிக்கமாட்டாமையின் அவர் செய்யும் அவ்வழிபாடு விக்கிரகாராதனையென்று வழங்கப்பட்டதா மென்பதூஉம்,இங்ஙனம் வேறுபாடு பெரிதுடைய சகளோபாசனைக்கும் விக்கிரகாராதனைக்கும் இலக்கண முணராது அவையிரண்டனையும் ஒன்றெனக் கொண்டு அவ்வாற்றான் ஆரி

யர்செய்து போதருஞ் சகளோபாசனை நன்முறையை ஒருசிலர் இகழுதல் பொருந்
தாதா மென்பதூஉமேயாமென்றுணர்ந்து கொள்க. இனி ஈசுரனை அங்ஙனம் உரு
வத்திருமேனியிற் கொண்டு வழிபடுமாறுதானென்னை? அருவமாகக் கொண்டுவணங்
குதலே அமையுமா மென்பார் ஆசங்கையொழிய ஒருசிறிது காட்டுதும்.

இனி, உபாசனைஎனினும் வழிபாடு எனினும் ஒக்கும். அவ்வழிபாடு உருவ
மான ஈசுரகோலத்தின்கட் செயப்படுதல் வேண்டுமெனக் கூறியதென்னை? அருவ
மாக ஈசுரனை வழிபடுதலே முறையாமாலெனின், நன்றுகடாயினாய், அவ்வீசுரனை
அருவமாகத்தான் வழிபடுதல் வேண்டுமென்னுங் கடப்பாடுஎன்னை என எதிர்கடாவு
வார்க்கு நீர் இறுக்குமாறு இன்றாம். அற்றன்று, காலத்தானும் இடத்தானும் வரை
யறைப்படாது விரிந்த அருவப்பிரமப்பொருள் காலத்தானும் இடத்தானும்வரையறுக்
கப்படும்உருவமாகவந்து அனுக்கிரகித்தல் சாலாதென்பதே எமது கருத்தாமெனின்;-
நன்றே வினாயினாய், அறிபொருளான ஆன்மாவின் கண்ணும் அறிவில் பொருளான
தூலசூக்குமப் பிரபஞ்சங்களினு மெல்லாம் இறைமுதற் பொருள் ஒருங்கு நிறைந்து
அவற்றின்மேலு ் விரிந்து செல்லும் வியாபக முழுமுதன்மையுடையதென்ப தெல்
லார்க்கும் ஒப்பமுடிந்தது; முடியவே, தூலப்பொருளான குடம்பட முதலியவற்றி
னெல்லாம் நிறைந்திருக்கும் அவ்விறைமுதற்பொருள் அக்குடம்பட நிறைவுபற்றி
ஒருவாற்றால் வரையறுக்கப்படு மென்பது துணிபொருளாம். அற்றேல், அது முழு
முதற்கடவுள் வியாபக இறைமைக்குணத்திற்கு இழுக்காம் போலுமெனின்;- அற்
றன்று, குடம்படமுதலிய பொருண்மாத்திரையின் மடங்கி நிறைந்து மேற்செல்லா
தாயின் அஃது அதற்கிழுக்காம்; அவ்வாறன்றி அவற்றினுள்ளும் புறம்புமெல்லாம்
ஒருங்கு நிறைந்து மேல்விரிந்து வியாபிக்கும் முதன்மையுடைமையால் அஃது அதற்கு
இழுக்கன்றாம். குடம்படமுதலிய தூலப்பொருள்களில் நிறையுந் துணையே அதுகண்
டப்பொருளென்பது பெறப்படுமோம் பிறவெனின், அஃதமையாது, வரையறுக்குங்
குடம்பட முதலியவற்றின் வரம்பின் கண்ணும் அது நிறைந்து உள்ளும்புறம்புந் தொ
டர்புற்று நிற்குமாகலின், தொடர்பின்றி யறுத்து வேறாக்கப்படுந் தூலப்பொருள்
போல் அதுகொள்ளற்பாலதன்று. இங்ஙனங் குடம்படமுதலிய பொருள்நிறைவுபற்றி
யும் அஃதொருவாறு வரையறைப்படுமென்பது காண்டுமாகலின், உருவப்பொருண்
மாத்திரமேதான் காலத்தானும் இடத்தானும் வரையறைப்படுமென நீ கூறியது பொ
ருந்தாது. அல்லதூஉம், பிறர் வயமாய்ச் சிருட்டிக்கப்படுந் தூலமாயாசரீரமிட்டுக்
கருப்பையிற்புகுந்து பிறக்கும் எம்மனோரைப்போன் முழுமுதற் பெருங்கடவுளுங்
கருமவயப்பட்ட சரீரந்தாங்கி வந்து அனுக்கிரகிக்கு மெனவுரைப்பினன்றே அஃது
அவன் இறைமைக்கு இழுக்காம். கட்புலனாகாத பேரொளிப் பிழம்பாய்ப் பேரறிவுரு
வாய் ஆனந்தவடிவாய் விளங்குந் தன் அருட்பெருங்கருணையே தனக்குரிய படிவமா
கித் தான் நினைந்தவாறே தன்னை நெஞ்சுருகிக்குழைந்து வழுத்தும் உண்மையன்
பர்க்கு வெளிப்பட்டு அனுக்கிரகிக்கு முழுமுதன்மையுடையான் ஈசுரன் என்று கோடு
மாகலின் அஃது அவற்கு இழுக்காதல் யாண்டையதென்றொழிக. அற்றேலஃதாக, ஈசு
ரன் அங்ஙனஞ் சகளமங்கள அருட்கோலந்தாங்கி வெளிப்படுங்கால் தன் சருவவியா
பகத்தையுஞ் சுருக்கிக்கொண்டு போதருமோ, அல்லது அவ்வியாபகத்தின்கண் ஒவ்
வோரிடத்திலேயே முனைந்து தோன்றுமோ எனஆயும்வழி, அவன்றன் சருவவியா
பகத்தையும் ஒருங்கு சுருக்கிக்கொண்டு போதராநிற்குமென வுரைத்துமாயின் அக்
காலத்து வியாபகமின்மை பெறப்படுதலானும், ஓரோரிடத்து முனைந்து தோன்று
மெனக்கோடுமாயின் அறிபொருளான பிரமங் கண்டிக்கப்படாமையின் அஃதோரிடத்

துத் தோன்றவே பிறிதோரிடத்தில்லையாமெனக் கொள்ளக்கிடத்தலானும் அவையிரண்டும் அமையாவென்பது தெற்றெனவிளங்குதலால் இறைவனுருவமாகத்தோன்றுமென்றல் யாங்ஙனம் நிரூபிக்கப்படுமெனின்;-நன்று கூறினாய், இறைவன் சகளமங்கள அருட்கோலந்தாங்கி வெளிப்படுங்கால் தன்சருவவியாபகத்தையுஞ் சுருக்கிக்கொண்டு போதருவானல்லன்; கன்று ஈன்ற புனிற்றாவின் புனிதசரீரமெங்கும் வியாபித்த அமுதசத்துக்கள் தீஞ்சுவைப்பாலாய் மடியினின்றும் பொழியுமாறு போலவும், அகண்டசமுத்திரத்தின்கட் குளிர்மிகும் ஒரோவிடங்கள் பனிக்கண்டங்களாய் உறைந்து கிடக்குமாறுபோலவும் யாண்டும் வியாபித்த இறைவன்றிருவருட்சக்திமெய்யன்பர்பொருட்டு ஒரோவிடங்களில் முனைந்துருவாக அதன்கண்ணே யிருந்து முதல்வன் அனுக்கிரகிப்பானென்றுணர்க. இதுபற்றியன்றே "இல்லாமுலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபா, னல்லா யுளவாமா னீர்நிழல்போ - லில்லா, அருவாகி நின்றானை யாரறிவார்தானே, யுருவாகித் தோன்றானேலுற்று" என்னுஞ் சிவஞானபோதத்திருவாக்கும் எழுந்ததென்றுணர்க. அற்றேல், இறைவன் கொள்ளும் உருவத்திருமேனிக்கும் நம்மனோர் தூலசரீரத்திற்கும் வேறுபாடென்னை யெனின்;- நம்மனோர் சரீரங்களெல்லாங் கருமவயப்பட்டுப் பிறராற் சிருட்டிக்கப்படுங் கண்டப்பொருளாய் நிலையுதலின்றி அழிவுபாடெய்து மியல்பினவாம்; ஈசுரனுடைய திருமேனிகருணையே வடிவாய் அவன் நினைந்தாங்குத் திரண்டெழூஉந் திப்பிய ஞானவுருவாம், ஈசுரன் கருணைத்திருமேனி அவன் சருவவியாபகமுழுவதூஉந் தொடர்புற்று ஒருவாற்றாற் கண்டமாதலும் ஒருவாற்றால் அகண்டமாதலுமுடையதாம். யாங்ஙனமெனின்;- நெடுங்கடற் பரப்பி லாங்காங்கு உறைந்த பனிக்கண்டங்கள் அக்கடல் நீரோடு இயைபுடையவாமாறுபோலவென்க. இனியது நம்மனோர் சரீரம்போல்வதன்று மற்று ஞானத்திருவுருவாம் என்கின்றீரால், அந்த ஞானத்திருவுருவத்தி னியல்புதானென்னையோவெனின்;- அவ்வுருவத்தினியல்பு நம்மனோரால் அறியவாராதென்று உணர்வையாக. தூலகாரியமாய் விளங்கும் இப்பிரபஞ்சவியல்பே யறியமாட்டாத சிற்றறிவினராகிய நாம் வாக்குமனாதீத கோசரமாய் விளங்கும் ஈசுரன் அருங்கருணைத் திருக்கோலவியல்பை யறியுமாறு யாங்ஙனம்? மின்சாரசக்தியை அறிந்துள்ளோம், அதன் சொரூபவியல்பு இன்னதென்றறியோம்; ஆகாயமுண்டென்பதறிவோம், அதன் சொரூபம் இன்னதென அறிமாட்டோம்; இரும்பைக்காந்தம் இழுப்பது கண்டு காந்தக்கல்லின் சக்தியையறிவோம், அச்சக்தியின் சொரூபம் இன்னதென்றறியும் ஆற்றலுடையோ மல்லோம்; இவ்வாறே தூலசூக்குமமாய் விளங்கும் பிரிதிவி அப்புத்தேயுவாயு முதலிய பூதங்களின் சொரூபவுண்மை யின்னதென்றறிய மாட்டாத சிற்றறிவினராகிய நம்மனோர் ஈசுரனியல்பை யுணர்வேமென்றல் குழறுபாடாய்முடியும். ஆழ்கடல் நீரில் ஆழவமுக்கி முகந்தாலும் நாழி நால்நாழி தண்ணீரை முகவாது, நாழி தண்ணீரையே முகக்கும், அந்த நாழிபோற் சிறிதான ஆன்மவுணர்வு கடல்போற்பரந்த ஈசுரன் இயல்பை யாங்ஙனம் அளந்தறியும்? ஆகலின், ஆன்மவறிவு விரியுந்துணையே ஈசுரன் அருட்கோல வியல்பு விளங்குவதல்லது மேற்சிறிதும் விளங்காதென்றுணர்க. ஆகவே, ஈசுரன் கருணைத்திருமேனியியல்பு நம்மனோர்க் கறியவாராதென்பதூஉம், அங்ஙனமாயினும் ஈசுரன்றாங்கும் அருட்கருணைத்திருவுருவு பற்றி அவற்கு வரக்கடவதோர் இழுக்கில்லை யென்பதூஉங்காட்டப்பட்டன.

இனி, ஈசுரனை உருவத்திருமேனியிற்கொண்டு வழிபடுதலினும் அருவமாய்க்கொண்டு வழிபடுதலே சிறந்ததாமென வைத்து ஒரு சாரார் வாதம் நிகழ்த்துகின்றமையின் அவர் செய்யும் அவ்வாதமும் போலியாமென்பது காட்டுவோம். தூலவுருவான உன்

விழிகளிரண்டும் தூலவுருவான பொருள்களையே காண்பனவன்றிச் சூக்குமவுருவான ஆகாயமுதலிய பொருள்களைக்காணமாட்டா, இவ்வாறே நின்செவி வாய் நாசி மெய் முதலிய உறுப்புக்களுந் தூலவடிவான ஒலி சுவை மணம் ஊறு முதலியவற்றையே உணருமாறல்லது வேறு அறியா. இவ்வைம்பொறிகளின்வழியாகப் பஃறலைப்பட்டுச் செல்லும் மனவுணர்வும் அவ்வைம்பொறி வாயிலாய் வந்த தூலப்பொருட்குணங்களையே அறிவதல்லது பிறிதில்லை. இங்ஙனந் தூலப்பிரபஞ்சப்பொருள்களையே அறியுமாற்றலுடைய மனமுதலிய தூலகரணங்களுடைய தூலசரீர வாசியாகிய நீ ஒருவாற்றானும் இக்கரணங்களான் அறியப்படாத அருவமாகக்கொண்டு ஈசுரனை வழிபடுமாறு யாங்ஙனமென்றுணரவல்லார்க்கு நீ சொல்லும்வாதம் வெறுஞ் சொன்மாத்திரையாகவே முடிதலல்லது பொருட்பேறின்றாம். இனி 'வழிபாடு' என்பதுதான் யாது? மனமுதலிய தூலகரணங்களெல்லாம் புறப்பொருளிற்சென்று பதிந்து விரியாது மடங்கி ஈசுரன் கருணைத்திருவுருவின்கட் சென்று பதிந்து ஆன்மாவை ஈசுரன் மாட்டு ஒருமையுறுத்துவதாமன்றே? அறிபொருளான இரண்டு ஒருங்கு சேர்ந்து ஒருமையுறுதற்கு இடைநின்று சந்து செய்விப்பன தூலகரணங்களுந் தூலகோலங்களுமாமன்றே? என்னை? சகளமங்களமான அருட்கோலத்தைக்காண்டலும் அதன்கண்ணே மனவுணர்வு சென்றுபற்றும், பற்றுதலும் அக்கோலத்தின்கண் நிறைந்த ஈசுரன்மாட்டு ஆன்மாவொன்றி ஒன்றுமாதலின். இதனை உலகியற்பொருள்களினும் வைத்துக்காட்டுதும். இங்ஙனம் வாதம் நிகழ்த்தும் ஆன்மாவான நீ நின் சரீரத்தின்கண் இல்லாதொழியின் ஈண்டு எம்மெதிர் வந்து நின்று எங்ஙனம் வாதம் நிகழ்த்துவை? நின்வாதத்தைப் பரிகரித்து மெய்ப்பொருள் வலியுறுத்துகின்ற யாம் எமது இச்சரீரத்தின்கட் புகுதாவிடின் எங்ஙனம் எம்மேற்கோளைத்தாபிப்பேம்? நாமிருவரும் இக்காலத்து ஈண்டிருந்து விவகரிப்பதெல்லாம் இருவேறு சரீரங்களுடைமையினாலன்றே? இங்ஙனம் இருவேறு சரீரங்களை நிலைக்களனாக்கொண்டு இருவேறான்மாக்கள் ஒன்று சேரும்வழி இரண்டும் ஒருமையுற்று இன்பமெய்துகின்றன. எழினலங்கனிந்த கொழுவிழிமகளிரும் உலம்பொரு தடந்தோளுறுவலியிளையரும் ஒருங்கியைந்து ஒன்று சேரினல்லது இன்பநுகர்தல் செல்லாமை இனிது விளங்கும்; சருக்கரையுங் கனிந்த பலாச்சுளையும் மாம்பழமும் வாழையங்கனியும் நறைகமழ்தேனும் ஒருங்குகலந்த கூட்டு வாய்ப்பெய்துழியல்லது உருசியின்பந்தோன்றாது; மான்மதமும் புழுகுஞ் சந்தனக்குழம்பும் விரைகமழ்மலரும் அருகணையினல்லது நாசியினுற் பிறக்குங் கந்தவின்பந்தோன்றாது; தீங்குழலோசையும் யாழியலோசையுங்கேட்பினல்லது செவியினுற்பிறக்கும் ஓசையின்பந்தோன்றாது; செழும்பட்டாடையிற் சமைத்த ஐவகை யமளியுறினல்லது மெய்யினுற்பிறக்கும் பரிசவின்பந்தோன்றாது. ஆகவே, இன்பந்தோன்றுதற்கு இருபொருட்சேர்க்கை இன்றியமையாதாகலானும், அச்சேர்க்கைதானும் இருவகைச் சரீரங்களையே நிலைக்களனாகக்கொண்டு நிகழ்தலானும் ஈசுரனை உபாசித்து அவனை ஒன்றியைந்து இன்பநுகர்கின்ற ஆன்மாவுக்கு ஓர்சரீரமும் அங்ஙனம் உபாசிக்கப்படும் முதல்வனுக்கு ஓர் சரீரமும் வேண்டுமென்பது சொல்லாமேயமையும். அங்ஙனமாயினும் ஆன்மாவுக்கு உண்டானசரீரம் கருமவயத்தான் மாயையிற்காரியப்படுத்ததாமென்பதூஉம், ஈசுரனுக்கு உண்டான சரீரங் கருணைவயத்தான் ஞானத்திற்றிரண்டு எழுந்ததாமென்பதூஉங் குறிக்கொண்டு போற்றற்பாலனவாமென்க. இங்ஙனம் இருவகைச்சேதனப் பொருள்கள் தம்முள் ஒன்றிணங்குதற்கு இருவேறு சரீரங்கள் வேண்டுமென்னும் நுட்பந்தெரித்தற்கன்றே, தமிழிலக்கண வாசிரியர் நிலைமொழியீற்றினின்ற உயிரோடு வருமொழி முதனின்ற உயிரிணைதற்கு இடையே ஓர் உடம்படுமெய்தோன்று மென்

றுளாயா நிற்பர். இங்ஙனந்தத்துவ இரகசியார்த்தங்களையெல்லாந்தந்து இலக்கண நூலுள்ளும் விளங்கவைத்தல் தமிழ் நூலாரிடத்தன்றி ஏனைப்பாடை நூலாரிடைக்காண்டலரிது என்பது இதன் சம்பந்தமாக ஈண்டு விதந்துரைத்து அத்தமிழ்மொழிமாட்சி குறிப்பானறியவைத்தாம். இதுநிற்க.

இனிச் சரீரங்களெல்லாந் தம்மை யுடையானுக்குப் பல்வகைத்துன்பங்களுந்தந்து விகாரமுறுத்தக்காண்டலின், அதுபற்றி ஈசுரன் றாங்கிவரும் அருட்கருணைத்திருவுருவும் அவனை விகாரமுறுத்தாதோவெனின்;—உறுத்தாது, சரீரங்களையுடையரான ஆன்மாக்களியல்புபற்றியே சரீரங்களின்றன்மை யறிவதல்லது, சரீரவியல்பு பற்றி ஆன்மாவை யளந்தறிதல் ஒரு சிறிதும் பொருந்தாது. யாங்ஙனமெனிற்கூறுதும், இருநிலமுழுதுந் தன்னடிப்படுத்துச் செங்கோலோச்சுவானான முடியுடை மன்னன் இருநிதிவைப்பிற்கேற்பவுஞ் சௌகரியங்கட்கேற்பவும் அதிகாரமுறைக்கேற்பவும் மிகவிசாலமாய் அகன்ற உன்னதவெழுநிலை 'மாடங்களும் மாளிகைகளும் அமைத்து அவற்றின்கண் இருப்பக்காண்கின்றோம். விலங்கினங்களைச்செகுத்துண்டு மழையினும் வேனிலினும் உழன்று திரிவானான வேட்டுவன் தன்னியல்புக்கேற்ப வைவேய்ந்த புல்லியகுடிலிலொதுங்கியிருந்து வாழ்நாட்கழிப்பதூஉங் காண்கின்றோம். உறையுள் கொள்கின்ற அரசன், வேட்டுவன் இயல்புபற்றியே உறையுள் அமைக்கப்படுதல் போலச் சரீரங்களைத்தாங்கி வருகின்றவரான பரமான்மா சீவான்மாவியல்புபற்றியே அவர்தாங்கிவருஞ் சரீரங்களும் மதிப்பிட்டு அளந்தறியற்பாலனவாம். ஈசுரன் முற்றறிவும் முழுமுதன்மையுஞ் சருவசக்தியும் தன் வயத்தனாதலும் அருட்கருணையுறையுளாதலு முடையனாகலின் அவன்றாங்கிவருஞ் சகளமங்களத்திருக்கோலம் எம்மனோரா லறியவாராப் பரிசுத்தம் பெரிதுடையதாதலும், ஆன்மாச்சிற்றறிவுஞ் சிறுதொழிலும் பிறர் வயப்படுதலு மலத்தான் மறைக்கப்படுதலும் பிறவுமாகிய குறைபாடுடையனாகலின் அவன் மேலிட்டு வருஞ்சரீரம் அசுத்தம் பெரிதுறுவதாதலும் நன்றுணரக்கிடக்கும். இவ்வுண்மை கடைப்பிடித்தன்றே ஆசிரியர் ஸ்ரீமது-அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.

"மாயைதான்மலத்தைப்பற்றிவருவதோர்வடிவமாகு
மாயவாணவமகன்றவறிவொடுதொழிலையார்க்கு
நாயகனெல்லாஞானத்தொழின்முதனண்ணலாலே
காயமோமாயையன்றுகாண்பதுசத்திதன்னால்" என்று சிவஞானசித்தியாரிலோதியருளியதூஉமென்க. இங்ஙனமாகலிற் சரீரங்கள் தாங்கிவரும் ஒப்புமைபற்றியே அவை யிரண்டற்குமுள்ள பேதமுணராது அவை, தம்மையுடையார்க்குப் பந்தமுறுத்துமெனக் கூறுதல் சிறுமகார் கூறுங்குழறுபாட்டுரையாய் முடியுமென்றொழிக. அது நிற்க.

இனி, உருவத்திருமேனியிற்கொண்டு ஈசுரவழிபாடு இயற்றுகின்ற அறிவுடையோர்க்குத்தான் அன்புமுதிர்ச்சியடைந்து ஈசுரனோடொன்றி யொன்றறக்கலக்கும் அத்துவிதமுத்திப்பெரும்பேறு சித்திக்குமென்பது மேற்கூறிய வாற்றானினிது விளங்கும். என்னையோவெனின், குழவிப்பருவந்தொட்டு முதுமைப்பருவங்காறும் உலகியற் புறப்பொருளோடு மணவுணர்வு ஒற்றுமையுறுகின்ற நெறியானே மக்களெல்லாரும் அறிவுவிளக்கமும் நாகரிகவிருத்தியு மெய்திவருகின்றாரென்பது மேலே விளக்கிப்போந்தாம். ஆதலான், மக்கள் மணவுணர்வு எக்காலத்தும் உலகியற்புறப்பொருளொன்றனைப்பற்றியே நிற்குமல்லது, தானே வேறுபிரிந்து தனித்துநிற்குந் தனிமுதலன்றாம். மனவுணர்வு ஒன்றையும் பற்றாது வேறு பிரித்துத் தனியே ஒருவழி

நிறுத்துவே மென்பாருரை வெறுஞ்சொன்மாத்திரையேயன்றி அஃது அவர்கூறு
மாறு அடங்குமியல்பிற்றன்று என்பது சிறிது சிந்திப்பார்க்கும் பொள்ளெனப்புலனும்.
இப்பெற்றி யுணர்ந்தன்றே "காடுங்கரையு மனக்குரங்கு கால்விட்டோட் வதன்
பிறகே, யோடுந்தொழிலாற் பயனுளதோ" என்று ஸ்ரீதாயுமானசுவாமிகளுந்திரு
வாய் மலர்ந்தருளினாரென்க. இத்தகைய மனவுணர்வின் பெற்றிதேறாதுயாம்அருவ
மாகக்கொண்டு ஈசுரனை உபாசிக்க மாட்டுவே மென்பாரென்கடவரென்க. அவர் இரு
விழியினையும் மூடிக்கொண்டு ஆகாயத்தை நோக்கி நிற்பாராயினும் அவர் மனவுணர்
வும் அங்ஙனம் நில்லாது; மற்றைத்தேயத்திலிருக்கும் அவர் மனைவியை நாடிச்செல்
லும்,மைந்தரை நாடிச்செல்லும்,நேயரை நாடிச்செல்லும், பொருள்வருவாயேது வென்
றாராயும், புத்திரர்க்கு நிதிதொகுக்குமாறு யாங்ஙனமென்று சிந்திக்கும், உன்னதபதவி
யெமக்கெப்போது கிட்டுமென்னும், மன்னவர்மதிக்க வாழுமாறெப்படி யென்னும்,
இன்னும் எத்தனையோ அரும்பெருங்காரியங்களை யெல்லாம் ஒரு நொடியிற்செய்ய
வல்லும்,இத்தகையமனத்தாலும் அருவமாக ஈசுரனை உபாசித்தல் யார்க்கேனுங் கூடு
மோ? அன்றி அங்ஙனஞ்சொல்வார் சொற்களை யார்தாமும் நம்புவார்களோ? அறிவுடை
யீர்சிறிதாராய்ந்து சொன்மின்! காணப்படும் உலகியற்பொருளின்கண் மனவுணர்வைப்
பதித்தன்றே காணப்படாத ஈசுரனையறிந்து உபாசித்து உய்தல்வேண்டும்; இதுபற்றி
யன்றே தெய்வப்புலமைத்திருவள்ளுவனார் "அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன்
முதற்றேயுலகு" என்றோதி ஈசுரநிச்சயம் பண்ணுவாராயினதூஉமென்க. நம்மன
வுணர்வின் விருத்தியே உலகியற்பொருள்களை ஒன்றனோடொன்று ஒப்பித்து அவ்வழி
வாராநிற்கின்று; 'நிழலருமை வெயிலிற்சென்றால் தெரியும்' என்னும் பழமொழியும்
இதனை வற்புறுத்தும். வெயிலையேயறியாதவனுக்கு நிழலின்றன்மையறியவாராது.
ஒளியையறியாதவனுக்கு இருளின்றன்மை யறியவாராது,தீஞ்சுவை யறியாதவனுக்குப்
புளிஞ்சுவையின்னதென்று அறியவாராது, நறுநாற்றமறியாதவனுக்குத் தீநாற்றந்தெரி
யவாராது. வாராதாகவே, உலகியற்பொருளுணர்வு சிறிதுமின்றி விலக்கினங்களினுந்
தாழ்ந்தவராதல் வேண்டும் மக்களெல்லாம். மற்று அவரெல்லாம் இன்றியமையா அவ்
வொப்புமையுணர்வு பற்றியே அறிவுவிளக்கம் பெறக்காண்டலால், மேலும் அவ்வொப்
புமை யுணர்வுதானே அவரை முத்திப்பெரும் பேற்றின்கண் உய்க்கவல்லதாம். ஒப்
புமையுணர்ச்சி இத்துணைப்பெருஞ்சிறப்பினதாதல் பற்றியன்றே தருக்கநூலாரும் உவ
மானத்தை ஏனைப்பிரமாணங்களொடு விதந்தெடுத்துக்கொண்டார். இங்ஙனம் உலகி
யற்பொருள்களைப் பற்றியன்றி மனவுணர்வு நில்லாமையானும், அம்மனவுணர்வும் ஒப்
புமைபற்றியன்றிப் பெருகாமையானும் ஈசுரனை உருவத்திருமேனியிற்கொண்டு உபா
சிக்கும் முறையே உண்மையாமல்லது ஏனையவெல்லாம் வெறுஞ்சொன் மாத்
திரையாகவே முடியுமென்றொழிக. அல்லதூஉம் எல்லாப்பொருள்களினும் நிறைந்து
பரந்த சருவவியாபகப்பரம்பொருள் உருவமாகக்கொண்டு உபாசிக்கப்படும் ஓர் பொரு
ளின் கண்ணும் நிறைந்திருக்கும் என்பது உமக்கும் ஒப்பமுடிந்தமையாற் சகளமங்கள
வழிபாடு ஆண்டும் பொருத்தமாவதேயன்றி இழுக்காமாறு இல்லை. அற்றேலஃதாக,
வாக்குமனோதீதமாய் விளங்கும் முழுமுதற்பெருங்கடவுளை வாக்குமனத்திற்கு எளி
வந்து விளங்குவதோர்பொருளாக வைத்து உபாசித்தல் நிரம்பாதாமெனின்;—அறி
யாது கடாயினாய், வாக்குமனத்திற்கு எளிவந்து விளங்கும் ஏனை உலகியற்பொருள்
போல ஈசுரன் கருணைத்திருக்கோலத்தையும் பிறழக்கொண்டு அவ்வாற்றால் அது
பொருந்தாதென்றல் மடமையேயன்றிப் பிறிதில்லை. வாக்கு மனத்திற்குப் புலனும்
உலகியற்பொருளெல்லாம் இது இதுவென்று சுட்டி யறியப்படுதலான் வரையறைப்
படுங் கண்டப்பொருள்களேயாம். ஈசுரன் வியாபக முழுமுதன்மை அங்ஙனம் இது

இக்காலத்தே முழுமுதனூலாயச்சிடப்பட்டுப் புறம்போந்துலாவுந் தொல்காப்பியந் தமிழவரசர்களாற் பெரிதும்பாதுகாப்பிட்டு வளம்படுக்கப்பட்ட தமிழ்மொழி மிக விரிந்து பரந்த அக்காலத்தே அருகிவழங்கிற்றென்றலும் ஒரோவொரு சூத்திரங்களே நடைபெற்றனவென்றலும் உலகவியற்கையொடு முரண்பாடு பெரிதுறுதலானும் அவ்வாறு கடாதல் பொருந்தாதாமென்று மறுக்க. அற்றேலஃதாக, நீலகண்டனார்தாம் "பொருளதிகாரம் வல்லாரை எங்குந்தலைப்பட்டிலே மென்றுவந்தார்" எனப்பாயிரத்துளுரைத்ததென்னையெனின்;—யாம் மேலேகாட்டிய காரணங்களானே அதுபொருந்தாமையின், சரிதவியல் வழுவத் தமக்குவேண்டியவாறே பாயிரமுரைத்த நீலகண்டனாருரை உண்மையெனத்தேறி யாராய்தற்பாற்றன்றாம். அற்றேல், இறையனாரகப்பொருள் வந்த வரலாறு பெறப்படல்வேண்டுமாலெனின்;—அது வந்த வரலாறு ஒருசிறிது கூறுவாம். "பன்னீரியாண்டு பாண்டிநன்னாடு, மழைவளங்கரப்ப மன்னுயிர்மடிந்தது" என்று சீத்தலைச்சாத்தனார் தங்காலத்து நேர்ந்த வற்கடகாலத்தை மணிமேகலைக்காப்பியத்திற் குறிப்பிட்டாராகலின், அஞ்ஞான்றிருந்த சங்கப்புலவர்தத்தம் நாடுநோக்கிச் சென்றிருந்தார். இருப்புழி ஒருசிலர் இறந்துபட்டார் ஒருசிலர் உயிர் பிழைத்திருந்தார். பின் அவ்வற்கடகாலஞ்சென்ற துணையானே பாண்டியனும் முன்சென்ற புலவரையெல்லாந் திரும்பவழைத்து ஒன்று கூட்டினான். அங்ஙனங்கூட்டப்பட்ட புலவோருள் ஒருசிலர் முன்னிருந்த முதியோரும் ஒருசிலர் பின்வந்த புதியோருமாய்க் காணப்பட்டார். காணப்படுதலும், பாண்டியனும் அவர்நூலாராய்ச்சியெல்லாம் புடைபட அளந்தறிவானாயினான். அவ்வாறறிகின்றுழி, அவர்செய்த தொல்காப்பியப்பொருளதிகார வாராய்ச்சியெல்லாம் அவர் தாந்தாமறிந்தவாறே தம்முண் மாறுபாடு பெரிதுற்று மயக்கமிகப் பயந்தமையானும், அப்புலவர் தாந்தாமறிந்த பொருளே மெய்ப்பொருளாமென இகலிக் கலாம் விளைத்தலானும் அரசன்புடை படக்கவன்று ஆலவாயமர்ந்த அவிர்சடைக்கடவுளை நினைந்துவருந்தினான். இஃதிவ்வாறிருப்ப, நீலகண்டனாருரைத்தவாறு தேவகுலம் வழிபடுவான் கொணர்ந்து காட்டிய அகப்பொருள்கண்டு அரசன்கழிபேருவகையெய்திப் புலவரையெல்லாங் கூய் "வம்மின்! நம்பெருமான் பொருளதிகாரமெய்ப்பொருடுணிதற்கு ஒருரையாணியாக மற்றிந்நூல் அருளிச்செய்தானாகற்பாலது. நீவிரிதனைக்கொண்டுபோய் நும்மாராய்ச்சித் திறனெல்லாம் விளங்க உரைகாண்மின்!" என்று விடுத்தான். விடுப்பத்தாந்தாம் வல்லவாறுரைகண்டு தெய்வப்பெற்றியுடையரான உருத்திரசருமரைத் திருவருளானெய்தி அவரால் நக்கீரனாருரையே மெய்யுரையெனக்கண்டு மகிழ்வுற்றாரெனச் சரிதவியல் பிறழாக்கோடலே பொருத்தமாம். யாங்கூறிய இவ்வரலாற்றின் முற்பகுதிக்கு ஏற்பவே வேப்பத்தூரார் திருவிளையாடலும் பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடலுங் கூறுமாறு காண்க. இவ்வாறு சங்கப்புலவர் தாந்தாம் வல்லவாறு பொருளாராய்தலறிந்து அவர்க்கோராணைவரம்பாய் அகப்பொருளறுபது சூத்திரம் அருளியதே அதன் வரலாறாம். மற்றுத் தொல்காப்பியப்பொருளதிகாரம் சங்கத்தாராராய்ச்சிக்கு அகப்படாமை பற்றியன்று. யாங்கூறியதே ஸ்ரீமத்-சபாபதிநாவலரவர்கட்குங் கருத்தாதல் அவர் திராவிடப் பிரகாசிகையில் இதுபற்றிக் கடாவிடையுள்ளுறுத்துரைக்கும் நுட்பவுரையானும் இனிதறியப்படும். இதுகிடக்க.

இனிச் சங்கப்புலவர்தாந்தா மறிந்தவாறே பொருளுரைமொழிந்து முரணினாராயின், அவரால் தொல்காப்பியப் பொருளதிகாரவுரைசெய்வித்துப்பின்உருத்திரசருமரால் ஒருரைவிழுப்பம் புலப்படுத்தலே இறையனார் தமக்கு முறையாமன்றிப் புதுவதாக ஓரகப்பொருணூல்செய் ததனோ டோருரைதோற்றுவித்தல் வேண்டா செய்தலா

மெனின்;—அற்றன்று, தொல்காப்பியப் பொருளதிகாரம் மிகவிரிந்து சென்று முடிதலின் அங்ஙனம் விரிந்தநூலுக்குப் பலபுலவரும் பலநாளரிது முயன்று செயும் பலவுரையுள்ளும் ஒன்றை விதந்தெடுத்து வழங்கப்படுக்கும்வழி ஏனையோரரிது முயன்றெழுதிய அத்தனையுரைகளும் பயனின்றிக் கழிந்தொழிதலானும், சிறியதோர் நூலுக்காயின் அவரெல்லாஞ் சிலநாளெளிது முயன்று இயற்றிய பலவுரையுள்ளும் ஒன்றனை விதந்தெடுத்து வழங்கி ஏனையவற்றை வழங்காது வீழ்த்தல் குற்றமன்றாதலானும், எளியதோர் முறையாற் பொருள்வரம்புதெரித்து அதுபற்றி விரிந்தபொருளெல்லாம் உணரவைத்தலே இறைவனுக்கு மாண்பாமன்றிப் பிறிதுபடுவழியாற்பெருகவைத்தன் மாண்பாகாமையானும் புதுவதாகச் சுருங்கிய நூலொன்றருளியது இறைவனுக்கு ஏற்புடையதேயாமென்றுணர்க. இது கிடக்க.

இனி, ஆப்தரவர்கள் இறைவனே அகப்பொருட்சூத்திரம் அறுபதும் அருளினானென்றற்கண் தமக்குடம்பாடில்லாமை தோன்றச் சிலகூறினார்கள். இறைவனொருவனுண்டென்றுகொண்டு வழுத்துகின்றவராகிய ஆத்திக சமயிகள் அவ்விஷயத்தின்கண் அங்ஙனம் ஐயுறவுகொள்ளல்வேண்டா. எத்தேசத்திலாயினும் எந்நாட்டிலாயினும் எக்காலத்திலாயினும் இறைவன்றன் அன்பருய்யும்பொருட்டு அவர் வேண்டியவெல்லா மருதுநல்கும் பெருந்திருவும் பேரருட்கருணையுமுடையனும். இத்தேயத்தார்க்கு யாமருள்புரிவோம் மற்றித்தேயத்தார்க்கு அருள்வழங்கோமென்று ஒருதலைப்படுங் குறைபாடு அவனுக்கின்றாம். இப்பெற்றி மீண்டு விரிக்கப்புகின் வரம்பின்றியோடுமாதலிற் 'சகளோபாசனை' யில் யாம் விரித்து விளக்குமாறுபற்றி ஆத்திகசமயிகளான அன்பர் அறிந்து மகிழ்க்கடவர். அல்லதூஉம், இங்ஙனம் ஒரோவொரு காலங்களி லோரோரன்பர்பொருட்டு அவர்க்கும் பிறர்க்கும் எளிவந்தருளும் பேரருட்கருணையும் பேராற்றலுமில்லையாயின் அவ்விறைவனை நாம் வழிபடுதலாற் போந்த பயனென்னை ? எல்லாமுலகவியற்கையோடோரிழையளவும் பிழையாது ஒத்து நிகழ்வதாயிற், பின்னைத் தெய்வமொன்று அவ்வுலக வியற்கையின் [illegible]க்குள்ளதென்றுகோடல் வெறுஞ்சொன்மாத்திரையாகவே முடிவதன்றிப் பொருட்பேறின்றாம். பரப்பிரமப்பொருளான தெய்வமும் உலக வியற்கையினக[illegible]த் கிடந்து மடங்குமென்று கோடுமாயின் அது சருவசத்தியுடையதென்னு[illegible]ரை பொய்யாயொழிய நாத்திகசமயப்படுகரிலுய்த்துக்கொண்டுபோய் விடுமன்றே. ஆகவே, ஆத்திகசமயிகளான நன்மக்கள் தேசசரிதவியல்வழாது நிகழும் அற்பு[illegible]ப்பெற்றிகளை உண்மையாமெனக் கடைப்பிடித்தொழுகக் கடமைப்[illegible]ரென்பது பெறப்பட்டது. இது கிடக்க.

இனி, நம் ஆப்தர் சவரிராயரவர்கள் தொல்காப்பியக் கலவையை நிறுவுதற்குத் தாம் முன்னேயுரைத்த இருகாரணங்களினும் வலியுடைய பிறிதோர் காரணங்காட்டப்புகுந்து, அவ்விலக்கணநூலுள் ஆண்டாண்டுக் காணக்கிடக்கும் ஆரியமக்களாசாரவியல்களும் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரநால்வகையாரிய வருணப் பாகுபாடும் ஆரியமொழி வழக்குகளும் பிறவுமான அகச்சான்றுகொண்டு, ஆரியமொழிச்சம்பந்தம் பெறாதகாலத்தே எழுதப்பட்ட தொல்காப்பிய விலக்கணநூலின்கட் பின்றைக்காலத்து ஆரியவழக்குகள் விராய் வருதல்பொருந்தாமையான் மற்று அவ்வாரிய வழக்குப்பற்றிவந்த சூத்திரங்களெல்லாம் ஆரியமொழிச்சம்பந்தம் பெரிதுற்றுவந்த கடைச்சங்ககாலத்தெழுதிச் சேர்த்து ஒருங்குதொகுக்கப்பட்டன வென்றுரைத்துத் தம்மேற்கோள் வலியுறுப்பாராயினார்கள்.

இனி ஆப்தரவர்கள் எடுத்துக்கொண்ட மேற்கோளைத் திண்ணிய எழூஉப் போற்றாங்குங் காரணங்கள் இரண்டாம். அவை தொல்காப்பியம் வடமொழிச்சம்பந்

தம் பெருதகாலத்தே இயற்றப்பட்டதென்பதூஉம், நால்வகையாரிய வருணப்பாகுபாடும் பிறவுங்கடைச்சங்கத்தார்காலத்தே விராய்வந்தனவென்பதூஉமாம். இவற்றுள், தொல்காப்பியம் ஆரியக்கலவை நிகழாக்காலத்தே யியற்றப்பட்டதென மொழிந்த காரணத்தை ஆப்தரவர்கள் மேன்மேல் வலியுறுத்தாமல் வாளாதெடுத்துக் கொண்டமையால், அது காழ்ப்பின்றியூழ்த்த மரம்போலெடுத்துக்கொண்ட மேற்கோளைத் தூர்ப்பலப்படுத்துமாறு காண்பிப்பாம்.

இனி, உலகவியற்கையொடு பொருந்தவைத்து ஆராய்கின்றுழி ஒருதேயத்தின்கண் ஒருவகையான மொழிவழக்கங்கொண்டு தத்தமக்கியைந்தவாறெல்லாம் ஆசாரங்கட்டியொழுகும் ஒருசாதியார்மாட்டு, வேறோர் தேயத்தின்கண் வேறோர்மொழி வழக்கங்கொண்டு தமக்கியைந்த ஆசாரவழியொழுகும் வேறுசாதியார் இலகுவிலே ஒருங்குகலந்து தம்மாசாரங்களை அவர்தழுவும்படி செய்யவாவது அவராசாரங்களைத்தாந்தழுவவாவது இடம்பெறமாட்டாரென்பது தெற்றெனவிளங்கும். அல்லது, அவ்விருவருந்தம்முள் ஒருமைப்பாடுடையராய் ஒருவராசாரங்களை ஏனையோர்தழுவி யொன்றுபட்டொழுகுதற்குப் பல்லாயிரவருடங்கள் சேர்ந்து கழியாநிற்கும். அவ்வாறு அப்பல்லாயிரவருடங்கழிந்து அவரோர் பிண்டமாய்த் திரண்டொழுகுந் துணையும், அவர் தம்முளிடையிடையே எண்ணிறந்த வாதங்களும் எண்ணிறந்த போர்களும் பிற இடையூறுகளும் நெறிப்படவாரா நிற்கும். இதற்கு நம் ஆங்கிலதுரைத்தனத்தார் ஆங்காங்குத்தமதிகார வழிப்படுக்கும் நாடுகளிற் றம்மாசாரங்களை நுழைப்ப முயறலும், அந்நாடுகளிலுள்ள பிறசாதியார் அம்முயற்சியை எதிர் நிறுத்தித் தம்மாசாரங்களைப் புகழ்ந்தெடுத்துப் போற்றுதலுமாகிய காண்டலளவையே இதுபற்றி யுய்த்துணரப்படும் பண்டைக்காலத்துமக்கட் சாதியாசார சமயாசாரக் கலவையினியல்பை இனிது விளக்கும். இவ்வாறுணரவல்லார்க்குக் கடைச்சங்கத்தார் காலத்தே கலவையுற்றுப் பிரசித்தியடைந்த நால்வகையாரிய வருணப்பாகுபாடும் ஆரியமொழி வழக்குகளும் பிறவும் அவர் காலத்திலேதான் அவ்வாறு மயங்கினவென்றுரைத்தல் ஒருசிறிதும் பொருத்தமின்றாம். என்னை? நாகரிக விருத்தியுற்று விளங்கிய தமிழ் முதுமக்களோடு அநாகரிக விருத்தியாற் போர்வன்மை படைத்துயர்ந்த ஆரியமக்கள் அங்ஙனம் இலகுவிலே கலந்தமைதல் சாலாமையானும், அன்றி அங்ஙனங்கலந்துறைந்து தம்மாசாரமாட்சி புலப்படுக்க வேண்டினராயினும் 'சிலப்பதிகாரம்' முதலிய உண்மைச்சரிதவியல் வழா நூலுரைகளால் ஆரிய மன்னருடன் மலைந்து அவரையெல்லாந் தம்மடிப்படுக்கும் ஆண்மைமறம் விளங்கிய தமிழ்முதுமக்களுடன் அவர் டல்காற்பொருது சமாதானம்பெற்று வாழ்தற்கு நெடுங்காலஞ்செல்லுமாதலானுமென்பது. எனவே, பண்டிதர் சவரிராயரவர்கள் கூறியவாறு கடைச்சங்கத்தார்காலத்து நால்வகையாரிய வருணப் பாகுபாடும் பிறவுங்கலந்து பிரசித்தியுறுதற்குமுன் சென்றவருடங்கள் மிகப்பலவாய் முடியுமன்றே. முடியவே, கடைச்சங்கத்தார்காலத்திற்குப் பல்லாயிர வருடங்களின் முன்னரே ஆரியமொழிச் சம்பந்தஞ் சிறிதுசிறிதாய் வரத்தொடங்கியதென்பது ஒருதலையாம். இனி அவ்வாரிய மொழிச்சம்பந்தம் முதன்முதற் புகுந்தகாலந்தானியாதோவெனிற்கூறுதும்.

தென்றிசையுயர்ந்த நொய்ம்மைபோக வடதிசையிருந்த அகத்தியமுனிவரை அத்தென்றிசைநோக்கிச் சென்றிருக்கவெனச் சிவபெருமான் கட்டளையிட்டருளினரெனவும், அக்கட்டளை வழிக்கொண்ட அகத்தியனார் 'தென்றிசையிற் சான்றோர் குழீஇயிருந்து அரியதோர்பாஷையாராய்ச்சி செய்துபோதருகின்றாரெனக் கேள்வியுறுகின்றேன்; பெருமானே! அடியேன் அங்குச்செல்லுங்கால் அச்சான்றோர் அப்பாஷையினியல்புபற்றி நிகழ்த்தும் ஆசங்கைகளைப் பரிகரித்தற்கு அதனியல்பெனக்

குளங்கொள அறிவுறுத்தருளல்வேண்டும்' எனக்குறையிரப்பப்பெருமானவர்க்கு அவ்வாறே அச்செந்தமிழ்மொழிப்பெற்றியெல்லாம் விரித்துணர்த்தி விடுப்பத் தென்றிசையிற் பொதியத்திருந்து தமிழ்த்தனி முதலிலக்கணந் தம்பெயர் நிறுத்தியற்றித் தொல்காப்பியனரை யுள்ளிட்ட மாணக்கர் பன்னிருவர்க்கதனை யுபதேசித்துத் தமிழ்வழிப்படுத்தாரெனவும் வாராநின்ற புராணவரலாற்ருல், ஆசிரியரகத்தியனர் தென்றிசைநோக்கிச் சென்றகாலமே வடமொழிவல்ல ஆரிய நன்மக்கள் தமிழ்நாடு புகுந்துறைந்த காலமாமென்பது நன்றுணரக்கிடக்கும். அக்காலத்தில் வடநாடுறைந்த ஆரியமக்கள் நாகரிக விருத்திமிகப்பெறுதலில்லாமலும், சருவ வுலகங்களையுஞ் சருவவான்மாக்களையும் இயக்குவானகிய முழுமுதற்பெருங்கடவுளொருவனுளனென்னு முதிர்ந்த வுணர்ச்சியில்லாமலும், உலகவியற்கையினிகழும் இடிமழை மின்னன் ஞாயிறு திங்கண் முதலான இயற்பொருளியக்கத்தைக் கண்டஞ்சி அவற்றையெல்லாந் தெய்வமெனத்துணிந்துபாசிக்கும் இருக்குவேதமந்திரவுரைகளையன்றி வேறில்லாமலும் வாழுவாராயினர். அக்காலத்திற் றென்னுடுறைந்த தமிழ்முதுமக்கள் நாகரிக விருத்திமிகப்பெற்றுச் சருவ வுலகங்களையுஞ் சருவ வான்மாக்களையும் இயக்குவதான பரப்பிரமப்பொருளொன்றுளதென்னும் முதிர்ந்தவுணர்ச்சியுடையராயும், உலகவியற்கையினிகழும் அவ்விடி மழை மின்னன் முதலாயினவெல்லாம் அப்பரப்பிரமப்பொருளின் அதிட்டானவலியானியங்குவனவன்றிச் சடப்பொருளானமற்றவையெல்லாந் தெய்வமென்று வழிபடுதற்குரியவல்லவென்னுந் துணிவுதோன்றக்கூறுந் தத்துவ நுண்பொருணுல்களுடையராயும் வாழுவாராயினர். இங்ஙனம் நாகரிகப்பெருக்கமுந் தத்துவ வுணர்ச்சியும் பெரிதுடையரான தமிழ் முதுமக்களொடு வடமொழிவல்ல ஆரிய மக்கள் ஒருங்குவிராயுறைந்த காலத்துத் தமிழருபாசிக்கும் பரப்பிரமப்பொருளையே தாமும் வழிபடற்குரிய முழுமுதற்பொருளாமென்று துணிந் [illegible] து அவ் [illegible] வுபாசனைப்பெற்றிமிகவிரித்து எசுர், சாமம்,
அதர்வணம் முதலான மந்தி [illegible] ரமொழி வகுத் [illegible] துத் தொகைப்படுத்தினர். இம்மெய்ம்மை
நன்றுணர்ந்தன்றே, வட [illegible] நூற்கடலுந்தென்றம [illegible] ழ்க்கடலுமொருங்கு நிலைகண்டு அவற்றி
னடிப்படையிற்கிடந்த அரிய நுண்பொருண [illegible] த்திலமெல்லாங் கையரிக்கொணர்ந்து தம்
விழுமியவுரைப் பெ [illegible] ற்றகட்டிற் குயிற்றித் [illegible] ம்மைநிகர்ப்பார்பின் யாருமின்றிவிளங்கிய
ஆசிரியர்-நச்சினர்க்கினியர் தொல்காப்பியனர் [illegible] நூலியற்றியருளியகாலத்து இருக்குமுத
லான நான்மறைவகுப்பு உண்டாயிற்றில்லை [illegible] யன்பதுகண்டு "இனி இருக்கும் யசுவும்
சாமமும் அதர்வணமுமென்பாருமுளர். அது [illegible] பொருந்தாது ; இவர்நூல்செய்த பின்னர்
வே [illegible] வியாதர் சின்னட்பல்பிணிச்சிற்றறிவினே [illegible] ர் உணர்தற்கு நான்குகூறுக இவற்றைச்
செய்தாரா [illegible] தலின்" என்றுதந்துணிபு நிலையிட்ட [illegible] ர். அல்லதூஉம்,*குமரிநாடு கடல்கொள்
ளப்படுதற்கு முன் தொல்காப்பியநூலெழுதப்ப [illegible] ட்டதென்பது முன்னூலாசிரியர் பின்
னூலாசிரியர்முதற் பண்டிதர் சவரிராயரவர்களை [illegible] ரயுள்ளிட்ட எல்லார்க்கும் ஒப்பமுடிந்
தமையானும், அதர்வவேதம், சதபாதபிராமண [illegible] ம், மற்சபுராணம் முதலான வடநூல்
களினும் மிகப்பழமையான †சேன்ட் என்னும் ப [illegible] ாரசீகபாஷையிலெழுதப்பட்ட ‡அவ
ஸ்தா என்னும் நூலினுங் குமரிநாடு கடல்கொள் [illegible] ரவெழுந்த வெள்ளப்பெருக்கின் வர
லாறு கூறப்படுதலானும் மிகப்பழையவான அவ் [illegible] வதாவவேதம் முதலாயினவெல்லாந்
தொல்காப்பியநூலெழுதப்பட்ட பிற்காலத்தே உ [illegible] ண்டாயினவென்பது தேற்றமாம்.
எனவே, நால்வகை ஆரியவேதப்பாகுபாடு பிறத [illegible] ற்கு முன்னரே தொல்காப்பியந்
தோன்றியதென்னும் ஆசிரியர் - நச்சினர்க்கினிய [illegible] ர் பிரமாணவுரை உரம்பெறுதல்
காண்க. இனி, இந்நூல்களெழுதப்படு முன்றேன்றி [illegible] ய தொல்காப்பியத் தமிழ்முதுமக்
கள் நாகரிகப்பெருக்கமுற்று வடமொழிவல்லாருட [illegible] ன் சிறிது விராய்ப்பழகத்தொடங்

* Lemuria. † Zend. ‡ Avesta.

கிய காலத்தே தோற்றமுற்றதொன்றும். ஆசிரியர் - தொல்காப்பியனார் அருந்தவத்
துயர்ந்த அகத்தியனார்க்கு மாணாக்கராதல் "மன்னியசிறப்பின்வானோர் வேண்டத்,
தென்மலையிருந்த சீர்சான்முனிவரன், றன்பாற்றண்டமிழ்தாவின்றுணர்ந்த, துன்னா
ருஞ் சீர்த்தித் தொல்காப்பியன்" என்னும் புறப்பொருள்வெண்பாமாலைப் பாயிரத்
தானும், அவரோடொருசாலை மாணாக்கரான காக்கைபாடினியார் யாப்பியன்முகவுரை
யானும் பிறவாசிரியர் நூலுரைகளானும் இனிது துணியப்படுதலால்வடமொழியினும்
வல்ல தம்மாசிரியர் அகத்தியனார் தமக்கறிவுறுத்த ஒருசில சொற்களையுங் குறியீடுகளை
யுந் தம்மிலக்கண நூலுள் ஆங்காங்குமொழிந்திடுவாராயினர். இவ்வியல்புபற்றியே சூத்
திரம், உதாரணம், அந்தம், மாத்திரை, கருமம், அம்போதரங்கம், குஞ்சரம், முதலிய
வடசொற்கள் அந்நூலுள் மயங்குவனவாயின. அவர்காலத்தே வடசொற்பொருள்கள்
உலகவியற்கையாய்த் தமிழ்மொழியின் மயங்கத் தொடங்கின என்பதினிது விளக்கிய
வன்றே "வடசொற்கிளவிவடவெழுத்தொரீஇ,யெழுத்தொடுபுணர்ந்தசொல்லாகும்மே"
எனவும் "சிதைந்தனவரினுமியைந்தனவரையார்" எனவும் "ஐந்திணைமருங்கிற், காமக்
கூட்டங்காணுங்காலை, மறையோர்தேஎத்து மன்றலெட்டனுட், டுறையமை நல்லி
யாழ்த்துணைமையோரியல்பே" எனவும் பிறவுமெல்லாம் ஓதுவாராயிற்றென்பது.
எனவே, குமரிநாடுகடல்கொள்ளப்படுமுன்னரே ஆரியமக்கள் தமிழ் முதுமக்களோடு
ஒருங்குவிராய்ச் சிறிது பழகத்தொடங்கினாரென்பதூஉம், அங்ஙனம் பழகத்தொடங்
கிய காலத்திலேதான் தொல்காப்பிய விலக்கணநூலியற்றப்பட்டதென்பதூஉம்இனிது
வலியுறுக்கப்பட்டன. இப்பெற்றிதேறாத ஆங்கிலமொழிவல்ல பண்டிதர் சிலர் ஆரியர்
தமிழ்நாடுபுகுந்த காலவளவை நன்குணரமாட்டாமையிற் றமக்கு வேண்டியவாறெல்
லாங் கூறினார். அஃதன்றியும், செந்தமிழ்த்தனி முதுமக்களொடு தம்மிலடைநிகழ்ந்த
நட்புரிமைச் சம்பந்த நெறியானே ஆரிய நன்மக்கள் நாகரிகப்பெருக்கம் பெரிதுறுவா
ராயினரென்பதூஉம் அவரறியாராயினார். ஆரியர் நாகரிகவிருத்திக்குத் தமிழ் முது
மக்க ணட்புரிமைச் சம்பந்தம் இன்றியமையாததாயிற்றென்று இவற்றின் பரப்பெல்
லாந் தம் நுட்பமதியால் அளந்தெடுத்துப் பண்டிதர் - சவரிராயரவர்களே சித்தாந்த
தீபிகை என்னும் ஆங்கிலமொழிப்பத்திரிகையில் இனிது விளக்கி யாப்புறுத்தார்கள்.
நியாயவறிவுடையார்க்கெல்லாம் அவர்களுரைத்த ஆராய்ச்சியுரைகள் பொருத்தமிக
வுடையனவாய் விளங்கும். துரபிமானம்பற்றி மயங்கும் ஏனையோர்க்கு அவை அங்ங
னம் எளிதில் விளங்கா. இதுகிடக்க.

இனிப்பண்டிதர் - சவரிராயரவர்கள் மேற்கோளை வலியுறுத்தும் ஆ[illegible]
வகைவருணப்பாகுபாட்டியன் மற்றைக்காரணம் ஒருசிறிது விளக்குவாம். நால்வகை
வருணப்பாகுபாடு ஆரியமக்கள் கட்டியதென்னும் அபிப்பிராயம் பிழைபடுவதொன்றாம்.
மற்று அது செந்தமிழ்த்தனிமுதுமக்கள் உலகியலொழுகலாறுபற்றி அவர் தம்முள்
நால்வேறுவகைப்படுத்துப் பண்டைக்காலந்தொட்டு வழங்கப்படுத்த நெறியாம். இச்
சாதி வகுப்புறு நெறி கடைப்பிடித்து அதனைப் பின்வந்து அநுசரித்தொழுகினோரான
ஆரியமக்கள் தமிழ் முதுமக்கள்கொண்ட கருத்தானன்றித் தந்நலம் மேம்படுக்கும்
விழைவா லதனை வேறுவகையாற் றிரித்துக்கொண்டு ஒருமைப்பாடு அழித்துவருகின்
றார். நன்றுசொன்னீர், நால்வகைவருணப்பாகுபாடு பண்டைக்காலத்து வடநூலுரை
களின் கண் இனிது காணக்கிடத்தலால், மற்றது தமிழ் முதுமக்களாலேதான் நெறிப்
படுத்து வகுக்கப்பட்டதெனல் யாங்ஙனமெனிற் கூறுதும். குமரிநாடு கடல்கொள்ளப்
பட்டபின் எழுந்த சதபாத பிராமணம் இரண்டாம் பிராமணத்தில் க, ௪, கக ஆம்
செய்யுட்களில் "பிரஜாபதி பூக் என்றுரைத்துப் பிராமணரைச் சிருட்டித்தார்; புவக்

என்றுரைத்து க்ஷத்திரியரைச் சிருட்டித்தார். ச்வக் என்றுரைத்து *விசியரைச்சிருட்டித்தார்'' என்றும், தைத்திரியபிராமணம் மூன்றும் பிராமணத்தில் கஉ, கூ, உ - ஆம் செய்யுட்களில் "இவ்வுலகமுழுவதூஉம் பிரமனாற் சிருட்டிக்கப்பட்டது. இருக்குவேதச்செய்யுட்களிலிருந்து வைசியவகுப்புச் சிருட்டிக்கப்பட்டதென மக்கள் சொல்லுகின்றார். அவர்கள், எசுர்வேதக்கருப்பையிலிருந்து க்ஷத்திரியர் பிறப்பிக்கப்பட்டார்களென்று சொல்லுகின்றார். சாமவேதத்திலிருந்து பிராமணர் தோன்றினார். இச்சொல்லை முன்னோர் முன்னோர்க்குச் சொல்லினர்'' என்றும், வாஜசனேயசம்மிதை கஈ - ஆம் அத்தியாயத்தில் உஅ - வது செய்யுளில் "பிரஜாபதி அதிபதியாயிருந்தான். பிராமணர் பிறப்பிக்கப்பட்டார். * * * * சம்வற்சரம் அதிபதியாயிருந்தது; க்ஷத்திரியர் பிறப்பிக்கப்பட்டார். பிருகற்பதி அதிபதியாயிருந்தார்; சூத்திரனும் ஆரியனும் (வைசியனும்) பிறப்பிக்கப்பட்டார்'' என்றும், அதர்வவேதம் ௬ - வது புத்தகத்தில், கூ, க-ஆம் செய்யுட்களிற் "பத்துத்தலை பத்துமுகங்களுடன் பிராமணன் முதன்முதற் பிறப்பிக்கப்பட்டான்; அவன் சோமரசத்தைப்பருகினன்''என்றும் சொல்லப்படுகின்றன. இவ்வாறே மனுதன்மநூல், விண்டுபுராணம், வாயுபுராணம், மார்க்கண்டேயபுராணம், இராமாயணம், மாபாரதம்முதலிய பின்னூல்களினுஞ் சாதிவரலாறு சொல்லப்படுகின்றது. இவற்றுட் சொல்லப்படும் வரலாறுகளெல்லாம் ஒன்றியைந்து செல்வனவல்லவாய் மாறுகோளுரை தோற்றுவித்துச் செல்கின்றன. சாதி வகுப்பு ஆரியமக்களாலே நிறுத்தப்பட்டதாயின் அவ்வரலாறுகளெல்லாம் ஒருநெறிப்படப்பொருள் போதியாநிற்கும். ஆரியர் தென்றமிழ்நாடு புகுதன்முன்னரே அத்தென்றமிழ் நாட்டகத்து நடைபெறலுற்ற சாதிவகுப்புப் பின்வந்த அவ்வாரியமக்கட்கு நலம்பெரிதுடையதாய் விளங்கிற்றாகலின், வந்த அவ்வாரியமக்கள் அதனைத் தாந்தா மறிந்தவாறெல்லாந் தழீஇக்கொண்டு தமக்குவேண்டியவாறே வரலாறு கூறினார்: இதுநிற்க.

இனித்தென்றமிழ்நாட்டகத்துத் தான் சாதிவகுப்புச் செய்யப்பட்டதென்பதும், அதுவுங் குமரிநாடுகடல்கொள்ளப்படுமுன்னரே வழக்கமுற்றதென்பதும் வலியுறுத்தல்வேண்டுமெனிற்கூறுதும். "குமரியாற்றின்றெற்கு நாற்பத்தொன்பது நாடுகடல் கொண்டதாகலின்'' என ஆசிரியர் நச்சினார்க்கினியரும், "அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னுமாற்றிற்குங் குமரியென்னு மாற்றிற்கு மிடையே எழுநூற்றுக்காவதவாறும் அவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரைநாடும் ஏழ்குறும்பனைநாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பதுநாடுங்குமரி கொல்லமுதலிய பன்மலை நாடுங்காடும் நதியும் பதியுந் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறுங் கடல்கொண்டொழிதலாற் குமரிப்பௌவ மென்றாரென்றுணர்க.'' என அடியார்க்குநல்லாரும் "வடிவேலெறிந்த வான்பகைபொறாது,பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்,குமரிக்கோடுங் கொடுங்கடல்கொள்ள''எனஆசிரியர் இளங்கோவடிகளும் பிறருங் கிளந்தெடுத்துக்கூறுதலின்; தென்றமிழ்க்குமரிநாடுகடல் கொண்டொழிந்ததொருதலையாமென்க. இனி, நால்வகைச் சாதி வகுப்புக் குமரிநாடு கடல் கொள்ளப்பட்டபின் எழுந்த வடநூலுரைகளிற் சொல்லப்பட்டதன்றி அந்நாடு கடல்கொள்ளப்படுமுன்னெழுந்த வடநூலின்கண் மொழியக்காணமையாற் குமரிநாடு கடல்கொள்ளப்படுமுன்னெழுந்த தமிழ்நூலில் மற்றது சொல்லப்படுமாயின் அச்சாதி வகுப்புத்தென்றமிழ்நாட்டிற் செய்யப்பட்டதென்னும் மேற்கோள் வலியுடைத்தாம்.

---

* வடநூற் சுலோகத்தில் 'விஸ்' என்று பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது.

சமாசாரக்குறிப்புகள்.

மாமத் அல்லது பெரியானை:—இந்தமிருகம் யானைபோல் தும்பிக்கைகொம்பு முதலிய அங்கங்களுடைய ஒருபெரும்பிராணி. இஃது யானையினும் பெரியது. இம்மிருகம் சில ஆயிரவருடங்கட்குமுன் உருசியாதேயத்தினும் அதைச்சார்ந்த பிறநாடுகளினும் இருந்தது. இக்காலத்தில் அம்மிருகம் இல்லையாய் ஒழிந்தது. இம்மிருகங்கள் ஒருசிலவற்றின் சரீரமெங்கும் ஓரடிநீளமுள்ள கரிய கோரைமயிர் அடர்ந்திருக்கும்; ஒருசிலவற்றிற்கு வளைவான திண்ணியமயிருண்டு; வேறுசிலவற்றிற்குக் கம்பளி மயிர் முளைப்பதும் உண்டு. இந்த மிருகத்தின் தந்தங்களும் எலும்புகளும்உருசியாதேசமெங்கும் சைபீரியாதேசத்தின் கீழ்ப்பாகங்களிலும் ஆர்த்திக்கு மகாசமுத்திரக்கரையையடுத்த சதுப்புநிலங்களினும் கண்டெடுக்கப்படுகின்றன. இவற்றின் கொம்புகள் தந்தவேலை செய்வதற்குப் பயன்படுதலால் அவற்றைவியாபாரிகள் ஊரூர்தோறுங்கொண்டுபோய் விற்பனை செய்கின்றார்கள். கி - பி. 1799௵ சைபீரியாதேசத்தில் பனியுறைந்த நிலத்தில் இப்பெரும்பிராணியின் சரீரம் முழுவதூஉம் துங்கூசியன் ஒருவனாற் கண்டுசொல்லப்பட்டது. இறந்துபோன பிராணியின் சரீரங்கள் அநேக ஆயிரவருடங்கள்வரையில் அழுகாமற் பனியிலிருக்குமாதலால், பல்லாயிரவருடங்களின் முன் இறந்துபோன இப்பிராணியின் சரீரமும் அப்பனிநிலத்திற் சிறிதுங் கெடாமலிருந்தது. தார்நதீபகற்பத்தில் வேட்டையாடும்பொருட்டும் மீன்பிடித்தற்பொருட்டும் சென்றவனான அந்தத்துங்கூசியன் மீன்பிடிக்குங்காலஞ்சென்றபின் அன்கோன் ஏரிசரையில் மாமத் என்னும் அம்மிருகத்தின் தந்தங்கள் கண்டெடுப்பதற்கு நெடுகத்தேடிச்சென்றான். அவ்வாறுசெல்கையில் ஒருநாள் பெரிய பனிப்பிண்டம் ஒன்றன்மத்தியில் வடிவம் நன்றாய் விளங்காத ஒருபொருளைக்கண்டான். கண்டும் அப்போதுஅதனை நன்றாய்க் கவனித்திலன். மறுவருடம் அவ்விடத்திற்குச்சென்றபோது அப்பொருள் பின்னுஞ் சிறிது நன்றாய் முன்னீண்ட இரண்டு உறுப்புக்களுடன் தோன்றியது. பின் 1801௵ - உம் ஆண்டு அவன்சென்ற காலையில் அப்பிரா[illegible]யின் வடிவமெல்லாம் நன்றாய் விளங்கித்தோன்றின. அதனைக்கண்டு அவன் [illegible]வ, தத்துவ சாத்திரிகள் சிலர் அங்குச்சென்று அதனைப் பரிசோதனைசெ[illegible]ார்கள். பார்த்ததில், அஃது ஓராண்மிருகமாய்க் காணப்பட்டது; அதன் [illegible]ட முரிப்பு ஒன்று இருந்தது; அதன் சரீரத்தின் உயரம் 9 அடி 4 அங்குலம்; மூக்கிலிருந்து வால்வரையில் அதன் நிகளம் 16 அடி 4 அங்குலம்; அதன்றந்தங்கள் 9 அடி 6 அங்குலம்; அவ்விரண்டு [illegible]ங்களும் 414 பவுண்டு நிறைநின்றன. இன்னும் இதன் அங்க[illegible]கள் இங்கிலாந்து தேசத்திற் பலவிடங்களிற் கண்டெடுக்கப்படுகின்றன. இவ்வாறே முன்காலத்திருந்த விசித்திர பிராணிகள் பல இக்கால[illegible]...

திருவோற்றி முருகர் மும்மணி[illegible]ோவை:—இந்த நூலைக்குறித்து நல்லபிப்பிராயம் மொழிந்திட்ட 'ஞானபோதினி' ப் பத்திரிகாசிரியர்மாட்டு நன்றிபாராட்டுங் கடப்பாடு பெரிதுடையோம். அவ்வபிப்பிராயத்தினிடையில், இம்மும்மணிக்கோவை மண்டலித்து முடியக்காணாமையால் அஃதிழுக்காம்போலு மென வுரைத்து நெகிழ்ந்துபோயினர். அது மண்டலித்து முடியாதாயினன்றே இழுக்காம். "நீர்வள நன்றோங்கும்" என்னுங் காப்புச்செய்யுள் இறுதியினின்ற 'கழல்' என்னுஞ் சொல்லொடு நூலிறுதியிலுள்ள "காணப்பெறாததொர் காட்சியையேனும்" எனுஞ் செய்யுளிறுதிக்'கழல்' எனுஞ் சொன் மண்டலித்து முடிதல் சாதாரண வறிவுடையார்க்கும் இனிது விளங்கு

மாகலின் அஃதிழுக்காதல் யாண்டையதென்றொழிக. அற்றன்று, "நீர்வளங்கவின்ற" என்னும் நூன்முதற் செய்யுண்முதற் சொல்லோடு அது மண்டலித்து முடிந்தின்றாக லின் அது குற்றமேயாமெனின்;—நன்று கடாயினாய், "நீர்வளநன்றோங்கும்" என் னுங் காப்புச்செய்யுட் சம்பந்தமின்றி யஃது அவ்வாறு மண்டலித்து முடியுமாயின் அக்காப்புச்செய்யுள் நூலோடியையின்றென்பது பட்டு அசற்குப் புறம்பாம. அற்றேல், காப்புச்செய்யுண் முதலெழுத்தொடு மண்டலித்து முடிகவெனின்;—அங்ஙனம் முடித லாற் காப்புச்செய்யுள் நூலகத்தே பட்டு நூலெனக் கொள்ளக்கிடக்கு மாதலானும், அங்ஙனங் கொள்வழி முப்பது முழுமுதற் செய்யுட்கண்மேல் தொகைகோடல் வேண் டுதலின் அஃதிழுக்காமாதலானும் அதுவும் பொருத்தமின்றாம். இனிக் காப்புச்செய் யுள் நூலுக்கு ஒருவாற்றானகனாதலும் ஒருவாற்றாற் புறனாதலுமாகிய இருநிலைமையு முடைமையான் அவ்வகப்புறவியைபு பற்றி அதனிறுதியினின்ற 'கழல்' என்பதொடு மண்டலித்து முடிக்கப்பட்டது. அங்ஙனம் முடித்தலால் நூலொடு காப்புச்செய்யு ளிடை நின்ற வியைபு இனிது விளங்குதலுங் காண்க. அல்லதூஉம், ஒருமணிக்கோ வையை வட்டித்து வாய்பொருத்துகின்றுழி அப்பொருதது வாய்ப்புறத்தே நிற்பதா கிய கொக்குவில்போல, காப்புச்செய்யுளிறுதியும் நூலிறுதிச்செய்யு ளிறுதியுந் தம் முட் பொருந்துழி, அதனோடியைபுற்று அதன்புறத்தே அணிசெய்து நிற்குங் காப்புச் செய்யு ளமைதியுந் தெற்றென விளங்கற்பாலதாம். அல்லதூஉம், முழுமுதற்கடவுள் கொழுமலர்ச்சேவடி தாங்கருந்துயருழக்கு முயிர்க்கு நீங்காக் களைகணாத றெரிக்கும் பொருட்டும், அச்சேவடியே எமக்கு உறுபெருந்துணையாயிருந்து நூன்முடிப்பிக்கு மென்னுங் கடப்பாடும், அங்ஙனம் முடிப்பித்தவழி அதன்கண் நன்றியறிதன் மிக்கு டைமையும் புலனாதற்பொருட்டும் அங்ஙனங் 'கழல்' எனுஞ் சொல்லால் மண்டலித்து முடிக்கப்பட்டது. இவ்வாறாகலின் இந்நூலின்கட் 'கழல்' எனுஞ் சொன் மண்டலித்து முடிந்தவாறு வாய்ப்புடையதே யாமென்று அறிக.

கையொப்ப நன்[illegible]ப விஞ்ஞாபனம்:—நாமெடுத்துக்கொண்ட திரு நெறித் தமிழ்ச் சைவ பரிபா[illegible]ரப் பத்திரிகாப்பிரகடனம் இனிது நடந் தேறும்பொருட்டு நம்மோடுடனிருந்து முயலுவதாக வாக்களித்துச் சிலநாளிருந்து [illegible]யறுந்து நம்மைவிட்டகன்ற ஸ்ரீ பு - வே - சபாபதிமுதலியாரிடம் நம் பத்திரி கை விஷயமாக நண்ப[illegible] யாரும் எதுவுஞ் செய்துகொள்ளாராகல்வேண்டும். கை யொப்பத்தொகை கடிதம் முதலா[illegible]ர்கள் எமக்கு நேரில் விடுக்கும் படி கோருகின்றோம். நம் அறிவிப்ப[illegible]னும் ஷை முதலியாருடன் நம் பத்திரிகையின் பொருட்டுக் கையொப்ப மு[illegible] செலுத்துவாராயின், அதற்கு நாம் உத்தரவாதியாராகோமென்பதை இதனான் வெளிப்படுத்துகின்றோம்.

இங்ஙனம் :

நா - வேதாசலம்பிள்ளை,

பத்திராதிபர்,

6, கந்தப்பசெட்டித்தெரு, சென்னை.

திருநெல்வேலி,
7 - 4 - 02.

எனது ஆப்தரத்தினமாகிய ஐயா,

தாங்கள் அன்புடனனுப்பிய புத்தகங்களிரண்டனுள் "சோமசுந்தரக்காஞ்சியாக்கத்தைப்" பார்த்தேன்; பார்த்தேற் கது தன்பகைவருங்கண் டகமகிழ்ந், தறிவுநிரம்பி, உறுதி சூழ்ந்துள்ளன்பு செய்துறவாடு மியல்புடையதாய்க் காட்டிற்று. இது தங்களிடை எனக்குள்ள நட்பின் மிகுதிகொண்டானும், செந்தமிழிடை எனக்குள்ள அன்பின் பெருக்கானுமன்றி, "மெய்ப்பொருள்காண்டல்" ஒன்றே பற்றி உற்றுநோக்கியாராய்ந்து கூறியதொன்றாம்.

* மும்மணிக்கோவையை விரைவிலாராய்வேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்பன்.
பா - சிவராமன்.
திருநெல்வேலி இந்து காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.

செண்ட்மேரித்தோப்பு,
11 - 11 - 1901.

அன்புள்ளஐய,

நான்தம்மிற்கலந்து பலநாட் கழிந்ததேனும், தங்கள் அருமை பெருமைகளை அன்றுதொட்டு என்றும் மறந்தவனல்லேன். நாடோறுமுள்ளன்பு பெருகுவது. சில தினங்களின் முன்னர் என் நண்பர் ஒருவர், தாங்களியற்றிய "மும்மணிக்கோவை"யை, என்பார்வைக்கு அனுப்பினர். அதனைக்கண்டதுந் தங்களைக்கண்டாற்போலும் ஆனந்தமடைந்தேன். அது தங்கள்மீதுள்ள எனது அபிமானத்தை விருத்தி பண்ணிற்று.

அச்சீரிய நூல் சொற்சுவை பொரு[illegible] ற்றொருறங்கருத்தைக் கவர்வது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகையா[illegible] ளின் றிறம்வாய்ந்து ஆக்கியோனது தமிழ் ஆராய்ச்சியைத் [illegible] சையுடைமை, ஆழமுடைமையமைந்து, ஆன்றோர் செய்யுட்[illegible] ந்து, செந்தமிழ்ச் சொற்கள் செறிந்து நல்லொழுக்கம் பயின்றி[illegible] னப்படித் [illegible] கர்குப் பெரிது வியப்பையும் உவப்பையும் பெருக்[illegible]

இக்காலத்துச் சீரியவல்லன இலு[illegible] கைஷகட்குப் பாடமாக ஏற்படுத்தப்படுகின்ற[illegible] தில்லையாய் ஒழிந்தன [illegible] னேபோலும். இம்மும்மணிக்கோவை போன்[illegible] சாலைக[illegible] பாடமாக நியமிக்கப்படுந் தகுதியை நிரம்பவுமுடைத்து [illegible] இந்நூல் பி. ஏ. வகுப்புப் பாடங்களுள் ஒன்றாதல் கூடாது. இதுவிஷயத்[illegible]ல் தாங்கள் சிறிது[illegible]யற்சிசெய்ய வேண்டுகிறேன். ம - ா - ா ஸ்ரீ. தண்டலம், பாலசுந்தரமுதலியாரவர்க[illegible] இதில் தங்களுக்கு வேண்டும் உதவி புரிவார்களென்று நம்புகிறேன். அவர்கள் [illegible]பான்றுரைத் தாங்கள் கேட்பதொன்றே போதுமானது.

தங்கள் ஆப்தன்,
டி - சவரிராயன்,
செண்ட் ஜோசப் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்.

கௌரவாபிமானசீலர்கள்.

நாகபட்டினம்

வெளிப்பாளையம் - சைவசித்தாந்தசபையார் ரூபா க0.

ஸ்ரீமான். சி - த - மா. முனிசாமிப்பிள்ளையவர்கள் ,, க0.

திண்டிவனம்

,, கு - சிங்காரவேலுமுதலியாரவர்கள் ,, க0.

,, சி - அருணாசலசெட்டியாரவர்கள் ,, க0.

டி-பி-டப்ளியூ-கண்டிராக்டர்

,, செ - வேதகிரிச்செட்டியாரவர்கள் ,, க0.

,, அ - துரைசாமிக்கௌண்டரவர்கள் ,, க0.

பிராஞ்சுபோஸ்டாபீஸ், வல்லம்.

,, ஓமந்தூர்-முத்துவேங்கடராமரெட்டியார் அவர்கள்கிளியனூர் க0.

,, பெ-ராம-வேங்கடசுப்பா ரெட்டியாரவர்கள் ,, க0.

,, சேவூர் - சுப்பா ரெட்டியாரவர்கள் ,, ,, க0.

இரங்கூன்.

,, T. M. பொன்னுசாமிப்பிள்ளையவர்கள் க0.

பேபர்கரன்சி ஆபீஸ்,

,, ரெய்பகதூர்-மதுரைப்பிள்ளையவர்கள், ஆனரரிமாஜிஸ்திரேட் க0.

சென்னை.

,, திருமயிலை - அரங்கசாமிநாயகரவர்கள் க0.

அபாதகிரி.

,, பெ - முனிசாமிமுதலியாரவர்கள்

சூபர்வைசர், இன்ஜினீரிங் டிபார்ட்மெண்ட்.

,, தண்டலம் - பாலசுந்தரமுதலியாரவர்கள்

[illegible]மிழ் டிரான்ஸ்லேட்டர் ஆபீஸ்,

[illegible]டி.

,, T. R. [illegible]வர்கள் க0.

[illegible]ஸ்பெக்டர்,

[illegible]தராபத்து.

,, சே[illegible]லி[illegible]ரவர்கள் க0.

[illegible]ரான்ஸ்போர்டு ஆபீஸ்,

[illegible]யால், சிகந்தராபாத்து.

[illegible]யினசெ[illegible]ள்ளைய[illegible]

[illegible]பின்மேல்

,, ஜே - எம் - [illegible]லசாமிப்[illegible]வர்கள். பி-ஏ, பி-எல்.,

[illegible]டிஸ்ட்ரிக்ட் முனிசீப், நந்தியால்.

கள்ளிக்கோட்டை.

,, பி. தியாகராஜமுதலியாரவர்கள் க0.

லோகல்பண்டு சூபர்வைசர்.

தொகை உபக[illegible]த்த கனவான்களன்றி மற்றைக்கனவான்களும் தாந்தாம் உபகரிக்கும் திவியத்தை விரைவிலுதவி யூக்கமுறத்துவார்களென்று திருவருளைச்சிந்திக்கின்றேம்.